Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, JULY 05, 2022

செவ்வாய்க்கிழமை ஜுலை 05, 2022 | ஒளி: 08 கதிர்: 040 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | Free

## ஜுன் 9 மின்தடை: ரூ.320 மில். நட்டம்

### விசாரணை நடத்துமாறு பரிந்துரை

இலங்கை மின்சார சபை பொறியியலாளர்களால் கடந்த ஜுன் மாதம் 9 ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கையின் விளைவாக ஏற்பட்ட மின் தடையால், 320 மில்லியன் ரூபாய் செலவாகியுள்ளதாகவும் மின் தடை குறித்து விசாரணைகளை நடத்துமாறும் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது. மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவுக்கு ஆணைக்குழு எழுதியுள்ள

தொடர்ச்சி P2



## மஹிந்தவின் உடல்நிலையில் பிரச்சினை இல்லை –நாமல்

முன்னாள் ஜனாதிபதியும் முன்னாள் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷவின் உடல்நிலையில் எவ்விதமான பாதிப்புகளும் இல்லை என்று ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினரும் மஹிந்தவின் புதல்வர்களில் ஒருவருமான நாமல் ராஜபக்ஷ நேற்று (04) தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

இன்று ஆரம்பமாகிறது கரும்புலிகள் வாரம்

## கரும்புலிகள் வாரத்தில் குண்டுகள் வெடிக்குமாம்

### அநுர கேள்வி; தயாரித்த செய்தியா எனவும் கேட்கிறார்



கரும்புலிகள் வாரத்தில் வடக்கில், தெற்கில் குண்டுகள் வெடிக்கக்கூடுமென வெளிநாட்டு புலனாய்வு சேவைகளை குறிப்பிட்டு, பொலிஸ் மா அதிபரால், பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தின் உண்மைத்தன்மையை அரசாங்கம் தெளிவுப்படுத்த வேண்டுமென மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி கேட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

### கரும்புலிகள் வாரம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒரு சிறப்புத் தாக்குதல் படை கரும்புலிகள் படையணியாகும். இது தமது இலக்கை நிறைவு செய்ய தற்கொலைத் தாக்குதலில் ஈடுபடத் துணியும் படையணியாகும். இவர்கள், உலகில் பயங்கரமானதும் கட்டுப்பாடு மிக்கதுமான தற்கொலை படையணியாக விளங்கினார்கள். முதல் தரைக் கரும்புலித் தாக்குதலை 1987 ஜுலை மாதம், 5ம் திகதி இலங்கை இராணுவத்திற்கு எதிராக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முதல் தற்கொலைப் போராளியான கரும்புலி கப்டன் மில்லர் தற்கொலைத் தாக்குதலாக நடத்தினார்.

தொடர்ச்சி P2

## ஒன்றுபடாவிட்டால் நாடு அழிந்துவிடும்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



கடந்த 3 வருடங்களில் இந்த நாட்டின் ஆட்சியாளர்கள், மற்றவர்கள் சொல்வதைக் காதில் வாங்காமல், தாங்கள் தான் சரி என்று எண்ணிச் செயற்பட்டார்கள், அதன் விளைவாக இன்று நாடு பெரும் பாதாளத்தில் வீழ்ந்துள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

சர்வாதிகார தன்மையில் செயற்படாது, அனைவரது கருத்துகளுக்கும் செவிசாய்க்கும் சமூக

தொடர்ச்சி P2


## உ/த பரீட்சைகள் ஒருமாதம் பிந்தும்

பா.நிரோஸ்



2021 ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சை பெறுபேற்றை ஓகஸ்ட் 15 ஆம் திகதி வெளியிடுவதற்கும், 2022 ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சையை நவம்பர் மாதத்தில் நடத்துவதற்கும் எதிர்பார்த்துள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த சபையில் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## மரணத்தின் விளிம்பில் இலங்கை

### அமெரிக்க பொருளாதார நிபுணர் ஸ்டீவ் ஹான்கே தெரிவிப்பு

மிக மோசமான பொருளாதார நெருக்கடியை இலங்கை சமீபத்திய காலங்களில் சந்தித்து வருவதாகவும், இலங்கையின் பணவீக்கத்தை அவதானிக்கும் போது நாட்டின் பொருளாதாரமானது மரணத்தின் விளிம்பில் இலங்கையை கொண்டு சென்றுள்ளது எனவும்

தொடர்ச்சி P2



## வரைவு கையளிப்பு

புதிய அரசியலமைப்பை தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வாவால் தொகுக்கப்பட்ட புதிய அரசியலமைப்புக்கான வரைவு, நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவிடம் நேற்று (04) கையளிக்கப்பட்டுள்ளது.

## படையினரையும் பொதுமக்களையும் மோதவிடுகிறது அரசாங்கம்

பா.நிரோஸ்



எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பாதுகாப்பு தரப்பினரும் பொதுமக்களும் சண்டையிட்டுக் கொள்வதாக தெரிவிக்கும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் ஹப்புஹாமி, அரசாங்கம் வேண்டுமென்றே பாதுகாப்பு தரப்பினருக்கும் பொது மக்களுக்கும் இடையிலான மோதலை உருவாக்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் அமைச்சர்கள் அனைவரும் ஆடையணிந்து இருப்பதாக எண்ணிக் கொண்டாலும் அவர்கள் அனைவரும் நிர்வாணமாகவே இருக்கிறார்கள். விவசாயிகள் மட்டுமல்ல நாட்டில் உள்ள அனைவரும் பிச்சைக்காரர்களாகியுள்ளனர். நாட்டிலுள்ள அனைத்து மீனவர்களுக்கும் மண்ணெண்ணையை வழங்குவதற்கான எந்த விதமான திட்டங்களும் முன்னெடுக்கப்படுவதாக தெரியவில்லை.

தொடர்ச்சி P2



## எரிபொருள் நிலையத்தில் எட்டி உதைத்த இராணுவ அதிகாரி குறித்து விசாரணை

குருநாகல், யக்கபிட்டியவில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இராணுவ அதிகாரி ஒருவரால் பொதுமகன் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில், இலங்கை இராணுவத்தால் உள்ளக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நிலந்த பிரேமரத்ன தெரிவித்தார்.

இராணுவ அதிகாரி ஒருவர், பொதுமகன் ஒருவரை எட்டி உதைத்த வீடியோ சமூக ஊடகங்களில் வைரலாக பரவியதை அடுத்தே விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அந்த அதிகாரி இலங்கை இராணுவத்தின் லெப்டினன் கேணல் என்றும் தெரியவந்துள்ளது.

தொடர்ச்சி P2

## 12க்கு முன் எரிபொருள் அறிக்கை சமர்ப்பிக்கவும்

### சட்டமா அதிபருக்கு உயர்நீதிமன்றம் உத்தரவு

எரிபொருள் கொள்வனவு, விநியோகம் மற்றும் எரிபொருள் விநியோகத்துக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய துறைகளை தெளிவுபடுத்தி அதுதொடர்பான அறிக்கையை ஜுலை 12ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு, சட்டமா அதிபருக்கு உயர்நீதிமன்றம் நேற்று (04) உத்தரவு பிறப்பித்தது.

தற்போதைய பொருளாதார நெருக்கடி தொடர்பாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தாக்கல் செய்திருந்த இரண்டு அடிப்படை உரிமைகள் மீறல் மனுக்களை பரிசீலிப்பதற்கு உயர்நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்தது. இந்த மனுக்கள், நீதியரசர்களான விஜித் மலல்கொட, மஹிந்த சமயவர்தன, அர்ஜுன ஒபேசேகர ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்ட போதே மேற்குறிப்பிட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. சமையல் எரிவாயு, எரிபொருள், மின்சாரம், பால்மா, மருந்துகள், உணவு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் தொடர்பான சலுகைகளை மக்கள் தடையில்லாமல் பெறுவதற்கு கொள்கைகளை வகுத்து நடைமுறைப்படுத்துமாறு அமைச்சரவைக்கு உத்தரவிடக் கோரி மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## ரூ.19 கோடி பெறுமதியான தங்க நகை, நாணயம் மீட்பு

19 கோடி ரூபாய் பெறுமதியான தங்க நகைகள், தங்க பிஸ்கட்கள், வெளிநாட்டு நாணயங்களுடன் இரண்டு இந்திய பிரஜைகளும் இலங்கையர் ஒருவரும் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர் என, விமான நிலைய சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் (03) இரவு டுபாயில் இருந்தும் நேற்று (04) அதிகாலை புது டெல்லியில் இருந்தும் வருகை தந்த விமானங்களிலேயே சந்தேகநபர்கள் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## "ஐ.எம்.எப் பேச்சு என்னா ஆச்சு"

### எதிர்க்கட்சி சபையில் கேள்வி

பா.நிரோஸ்



சர்வதேச நாயண நிதிய பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல்கள் தோல்வியடைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளதாகவும், இது தொடர்பான உண்மை நிலைவரத்தை அரசாங்கம் வெளியிட வேண்டும் என்றும் எதிர்க்கட்சி பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்துள்ளது.

பாராளுமன்றத்தில் நேற்று (4) நடைபெற்ற வாய்மூல விடைக்கான கேள்விகளின் போது இடையீட்டு கேள்வியொன்றை முன்வைத்த எதிர்க்கட்சி பிரதம கொரடாவான ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

தொடர்ச்சி P2

## இலங்கையின் நிலைமை அனைவருக்கும் ஒரு பாடம்

### மலேசியாவின் முன்னாள் பிரதமர் மஹதிர் மொஹமட்



இலங்கையின் தற்போதைய கடன் நெருக்கடியானது, ஏனைய ஆசிய நாடுகளின் அரசாங்கங்களுக்கு எச்சரிக்கையாக அமைந்துள்ளது எனவும் பொறுப்பான நிதிக் கொள்கையை சகலரும் பின்பற்ற வேண்டும்; இல்லையேல் சர்வதேச நாணய நிதியத்தின் கைகளில் சிக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும் எனவும் மலேசியாவின் முன்னாள் பிரதமர் மஹதீர் மொஹமட் தெரிவித்துள்ளார்.

தெற்காசிய தேசத்திடம் (இலங்கை) இறக்குமதிக்கு செலுத்த வேண்டிய அந்நிய செலாவணி கையிருப்பு இல்லாமல் போய்விட்டது. இது அரசியல் ஸ்திரத்தன்மையின்மையுடன் நாட்டை உணவு, எரிபொருள் பற்றாக்குறைக்கு வித்திட்டுள்ளது. நாடு தனது வெளிநாட்டுக் கடனைச் செலுத்துவதை நிறுத்திவிட்டு,

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## மஹிந்தவின் உடல்நிலையில் பிரச்சினை இல்லை -நாமல்

அவர், சுகவீனமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சமூக ஊடகங்கள் உட்பட முக்கிய செய்தி நிறுவனங்களும் செய்திகளை வெளியிட்டுள்ளன. அந்த செய்திகளில் எவ்விதமான உண்மைத்தன்மையும் இல்லை. செய்திகளை உறுதிப்படுத்திக்கொண்டு வெளியிடவேண்டும் என்றும் நாமல் ராஜபக்‌ஷ கேட்டுக்கொண்டார்.

நாட்டின் தற்போதைய நிலைமையில், போலியான செய்திகளை உருவாக்குதல், மக்களிடத்தில் குழப்பங்களை ஏற்படுத்தும் வகையிலான செய்திகளை உருவாக்குதல் அவ்வளவுக்கு நல்லதல்ல. நாட்டின் மக்களை திசைதிருப்புவதற்கு கோபத்தை ஏற்படுத்துவதற்கு இன்றேல் தூண்டும் வகையில் செய்திகளை பரப்புவதை தவிர்க்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

மஹிந்த ராஜபக்‌ஷ, சுகவீனமடைந்து தனியார் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சைப்பெற்று வருகின்றார் என, ஜூன் 30 ஆம் திகதிமுதல் செய்திகள் வெளிவருகின்றன. அந்த செய்தியை முன்னாள் பிரதமரின் ஒருங்கிணைப்புச் செயலாளரும் மறுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜூன் 9 மின்துடை: ரூ.320 மில். நட்டம்

கடிதத்திலேயே இவ்விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. நீர் மின் உற்பத்தி நிலையங்களை குறிப்பிட்ட நாளில் இயக்கியிருக்கக் கூடிய நிலையில், எரிபொருள் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின் உற்பத்தி நிலையங்களை இயக்குவதற்கு 320 மில்லியன் ரூபாய் செலவாகியுள்ளதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

திட்டமிடப்படாத நடவடிக்கை காரணமாக நீர் உற்பத்தி நிறுத்தப்பட்டமையால், ஜூன் 9 ஆம் திகதி அதிகாலை 4.30 மணி முதல் காலை 8.45 மணி வரை மின்சாரத்தை வழங்குவதற்கு மின்சார சபை தவறியதாக, கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

விமலசுரேந்திர, கன்யொன், பழைய லக்‌ஷபான, புதிய லக்‌ஷபான, பொல்பிட்டிய, மேல் கொத்மலை, விக்டோரியா, ரந்தெனிகல, ரந்தெம்பே, உக்குவெல, போவதென்ன ஆகிய மின் உற்பத்தி நிலையங்களை ஒதுக்கப்பட்ட காலப்பகுதியில் செயற்படுத்த மின்சார சபை தவறியுள்ளதாகவும் ஆணைக்குழு குற்றம் சுமத்தியுள்ளது. களனிதிஸ்ஸ, யுகதனவி மின் உற்பத்தி நிலையங்களை குறித்த காலப்பகுதியில் செயற்படுத்தியமை காரணமாகவே அவற்றின் செயற்பாட்டுக்கு 320 மில்லியன் செலவாகியுள்ளதாக அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கரும்புலிகள் வாரத்தில் குண்டுகள் வெடிக்குமாம்

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினால் செய்யப்பட்டதாக காரணங்களை காண்பிக்கும் வகையிலேயே அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எனத் தெரிவித்துள்ள அநுரகுமார, ஆகையால், அந்த வெளிநாட்டு புலனாய்வு சேவைக்கு எவ்வாறு தகவல்கள் கிடைத்தன. உபாயங்கள் என்ன? அதன் உண்மைத்தன்மை என்ன? என்பது தொடர்பில் மக்களுக்கும் நாட்டுக்கும் அரசாங்கம் தெளிவுபடுத்தவேண்டுமென கேட்டுக்கொண்டார்.

அவ்வாறு இல்லையேல் அரசாங்கத்துக்கு எதிராக வலுக்கும் போராட்டங்களை முடக்கும் வகையில் இவ்வாறான செய்திகள் தயாரிக்கப்பட்டனவா? என்றும் அநுரகுமார திஸாநாயக்க அரசாங்கத்திடம் கேள்வியெழுப்பினார்.

கட்சியின் தலைமையத்தில் நேற்று (04) நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே, மேற்கண்டவாறு தெரிவித்த அவர், பாதுகாப்பு செயலாளர் தெரிவித்துள்ள கருத்தை வன்மையாக கண்டித்துள்ளார்.

அரசியல்வாதிகளை இலக்கு வைத்து தாக்குதல் நடத்த மக்கள் விடுதலை முன்னணி மற்றும் எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய அரசியல் குழுக்களும் செயற்படுவதாக தகவல் கிடைத்துள்ளதாக பாதுகாப்பு செயலாளர்தெரிவித்துள்ள கருத்தையும் வன்மையாக கண்டிதுள்ளார். எமது நாட்டில் நீண்ட காலமாக பின்பற்றப்படும் பொருளாதாரக் கொள்கையின் விளைவுகளையே தற்போது மக்கள் எதிர்கொண்டு வருகின்றனர். இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கத் தவறிய அரசாங்கம், நாட்டின் அனைத்துத் துறைகளிலும் உள்ள பொதுமக்களை பெரும் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. இவ்விடயத்தில் அரசாங்கம் முழுப்பொறுப்பேற்க வேண்டும். ஒன்று தீர்வுகளை உடனடியாக வழங்க வேண்டும், அல்லது ஆட்சியை விட்டு வெளியேற வேண்டும். ஆனால் இதனை விடுத்து நாட்டில் மீண்டுமொரு குழப்பத்தை ஏற்படுத்த சதி செய்து வருகின்றது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமல் குணரத்னவுக்கு, பொலிஸ் மா அதிபர் சி.டி. விக்கிரமரத்ன ஜூன் மாதம் 27ஆம் திகதி அனுப்பியுள்ள கடிதத்தில், இரண்டு முக்கிய விடயங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன.

ஜூலை 5ஆம் மற்றும் 6ஆம் திகதிகளில் (இன்றும் நாளையும்) கரும்புலி நினைவேந்தல் தினத்தை இலக்கு வைத்து, வடக்கில் அல்லது தெற்கில் குண்டுவெடிப்புகள் இடம்பெற வாய்ப்பு உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கில் உள்ள முக்கிய பிரமுகர்களையும் வெளிநாட்டு தூதரக பணியாளர்களையும் இந்த இரண்டு நாள்களும் எந்த நிகழ்விலும் கலந்துகொள்ளவேண்டாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது. அத்தகைய சம்பவம் தொடர்பான தகவல் பெறப்பட்ட விதம் மற்றும் குறிப்பிட்ட தகவல்களை அரசாங்கம் முன்வைக்க வேண்டும். ஆனால் இதுபோன்ற தாக்குதல் குறித்து அரசாங்கம் தவறான தகவல்களை பரப்புகிறதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது என்றார்.

### கரும்புலிகள் வாரம்

வடமராட்சி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நிலைகொண்டிருந்த இராணுவமுகாமின் மீதே தற்கொலைத் தாக்குதல் நடாத்தப்பட்டது. இத் தாக்குதலால் இலங்கை இராணுவத்தின் ஒப்ரேசன் லிபரேசன் எனும் நடவடிக்கை முடக்கப்பட்டது. ஜூலை 5 ஆம் திகதியே கரும்புலி வாரம் ஆரம்பமாகிறது.

## ஒன்றுபடாவிட்டால் நாடு அழிந்துவிடும்

சீர்திருத்தத்தின் மூலம் நாட்டை கட்டியெழுப்ப முடியும் எனவும், அதற்காக முற்போக்குக் கட்சிகளின் முன்மொழிவுகளையும் யோசனைகளையும் தான் செவிமடுப்பதாகக் கூறிய எதிர்க்கட்சித் தலைவர், நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதே எமது நோக்கம் எனவும் தெரிவித்துள்ளார்.

பன்முகப்படுத்தப்பட்ட யோசனைகளை ஒன்றிணைக்கக்கூடிய பொதுவான தேசிய நிகழ்ச்சி நிரலின் மூலமாக இப்போது எமது மக்கள் இழந்துள்ள அனைத்தையும் மீண்டும் பெற்றுக்கொள்ள முடியும். மக்கள் இழந்துள்ள மூச்சை மீண்டும் பெற்றுக்கொடுக்க தாம் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ள எதிர்க்கட்சி தலைவர், சகல தரப்பும் இந்த முயற்சிக்கு கைகொடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ‘தேசிய சீர்திருத்தங்கள் மற்றும் முன்னோக்கிப் பயணம்’ வேலைத்திட்டத்தின் கூட்டமொன்று நேற்று (04) கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்றது. முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதஸ, ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, பாராளுமன்ற உறுப்பினர்களான சரத் பொன்சேகா, ராஜித சேனாரத்ன, மனோ கணேசன், ரவூப் ஹக்கீம், சி.விக்னேஸ்வரன், பி. திகாம்பரம் உள்ளிட்ட சிலரும், விக்டர் ஐவன், ஜனரஞ்சன, காமினி வியங்கொட, ரொஹான் சமரஜீவ உட்பட சிவில் செயற்பாட்டாளர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## ரூ.19 கோடி பெறுமதியான தங்க நகை, நாணயம் மீட்பு

குறித்த நபர்களிடம் 8.5 கிலோ கிராம் தங்கம், இரண்டு பாதிகளாக்கப்பட்ட தங்க பிஸ்கட்டுகள், 75,000 அமெரிக்க டொலர், 18,000 யூரோ இருப்பது கண்டறியப்பட்டது. மூவரும் தங்களது ஆடைகளில் பொருட்களை மறைத்து வைத்திருந்ததாகவும், அவர்கள் அணிந்திருந்த காலணிகளில் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டு இருந்ததாகவும் சுங்கப்பிரிவினர் தெரிவித்தனர்.

42, 53 வயதுடைய இந்தியர்கள், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் தங்கம் மற்றும் நாணயக் கடத்தல் மோசடியில் ஈடுபட்டுள்ளதாகவும் 46 வயதான இலங்கையர் வர்த்தக நோக்கத்துக்காக அடிக்கடி வெளிநாட்டு விஜயங்களில் ஈடுபடும் நபர் எனவும் கண்டறியப்பட்டுள்ளது. கைப்பற்றப்பட்ட தங்கம் மற்றும் வெளிநாட்டு நாணயங்கள் பறிமுதல் செய்யப்பட்டதுடன், மூன்று நபர்களுக்கும் தலா 25,000 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

## படையினரையும் பொதுமக்களையும் மோதவிடுகிறது அரசாங்கம்

1,500 ரூபாய்க்கும் அதிகமான விலை கொடுத்தே மண்ணெணெய்யை பெற்றுக்கொள்ளும் நிலை மீனவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

பாதுகாப்பு தரப்பினரும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் அடித்துக் கொள்கிறார்கள். இந்த மோதல் நிலையை அரசாங்கம் திட்டமிட்டு உருவாக்கி இருக்கிறது. அதேபோல் எரிபொருள் நிரப்பு நிலையங்களை விற்பனை செய்வதற்கும் அரசாங்கம் முயன்று வருகிறது எனவும் கூறினார்.

## 12க்கு முன் எரிபொருள் அறிக்கை சமர்ப்பிக்கவும்

சம்பந்தப்பட்ட அனைத்து பங்குதாரர்கள் மற்றும் சுயாதீன நிபுணர்களுடன் உடனடியாக ஆலோசனை நடத்தி கொள்கைகளை வகுப்பதற்கு அமைச்சரவை நடவடிக்கை எடுக்கவேண்டும் என, மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதற்கு நாடு தற்போது நீண்ட வரிசையில் நிற்பதாகவும், கடுமையான தட்டுப்பாடு மற்றும் விலைவாசி உயர்வால் மக்கள் போராட்டங்கள் மற்றும் பொது அமைதியின்மை போன்றவை ஏற்படுவதாகவும் என்று மனுக்களில் கூறப்பட்டுள்ளது.

சட்டமா அதிபர், அமைச்சரவை, மத்திய வங்கி ஆளுநர், திறைசேரியின் செயலாளர், பல அமைச்சுக்களின் செயலாளர்கள், இலங்கை மின்சார சபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் ஆகியோர் இந்த மனுக்களில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர். சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் சாலிய பீரிஸ், பிரதித் தலைவர் அநுர மெத்தேகொட, முன்னாள் செயலாளர் ரஜீவ் அமரசூரிய, பொருளாளர் ரஜிந்த் பெரேரா மற்றும் உதவிச் செயலாளர் பசிந்து சில்வா ஆகியோர் இந்த மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

## மரணத்தின் விளிம்பில் இலங்கை

அமெரிக்க பொருளாதார நிபுணர் ஸ்டீவ் ஹான்கே தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பணவீக்கம் தற்போது 122 வீதமாக உயர்ந்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள அவர், சர்வதேச நாணய நிதியம் கூட இலங்கைக்கான கடன் முறையை நிராகரித்துள்ளது என்றும் கூறியுள்ளார். இதுவரை காலமாக சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை 16 வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளது. ஆனால், இலங்கை அதிகாரிகள் எவரும் அந்த வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜோன்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் அவதானிப்பின் படி வருடமொன்றுக்கு அதிக பணவீக்கம் விகிதம் பதிவாகிய நாடுகளின் பணவீக்க பட்டியலில் இலங்கை இரண்டாம் இடத்தை அடைந்துள்ளது. சிம்பாபேவேவின் மிக மோசமான பணவீக்க நிலைமைகளுக்கு அடுத்த படியாக இலங்கை 122 வீத பணவீக்கத்தை வெளிப்படுத்தியுள்ளது என தெரிவித்துள்ள அவர், எதிர்வரும் காலங்களில் மிக மோசமான நிலைமைகளுக்கு இலங்கை முகங்கொடுக்க நேரிடும் எனவும் தெரிவித்துள்ளார்.

## உ/த பரீட்சைகள் ஒருமாதம் பிந்தும்

பாராளுமன்றத்தில் நேற்று (4)ஆளுங்கட்சி உறுப்பினர் சாந்த பண்டார எழுப்பிய கல்வித்துறை தொடர்பான கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இதனை தெரிவித்துள்ளார். அதன்போது அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

உயர்தரப் பரீட்சையை நவம்பர் மாதத்தில் நடத்தவே எதிர்பார்த்துள்ளோம். இதன்படி பரீட்சை ஒரு மாதம் தள்ளிப் போகவுள்ளது. அத்துடன் இந்த வருடத்தில் நடைபெற்ற உயர்தரப் பரீட்வை பெறுபேற்றை ஒகஸ்ட் 15 ஆம் திகதி வெளியிட எதிர்பார்க்கப்பட்டுள்ளது. பெறுபேறு வெளியாகி 3 மாதங்களின் பின்னரே அடுத்த பரீட்சை நடைபெறும் என்றார்.

இதேவேளை உயர்தரப் பரீட்சையின் பாடங்களுடன் தொடர்புடைய அனைத்து பாடங்களின் ஆசிரியர்களுக்கும் பல்கலைக்கழக பேராசிரியர்களின் விசேட கருத்தரங்குகளை நடத்துவதற்கும் ஏற்பாடுகளை செய்து வருகின்றோம். அத்துடன் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளமையால் ஆரம்பப் பிரிவு மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பில் ஆய்வுகளை செய்து வருகின்றோம். விடுமுறையால் இல்லாமல் போன காலத்தை ஈடு செய்யும் வகையில் வேலைத்திட்டங்களை தயாரித்து வருகின்றோம் என்றார்.

## இலங்கையின் நிலைமை அனைவருக்கும் ஒரு பாடம்

ஐ.எம்.எப் கடனுக்கான பேச்சுவார்த்தையைத் தொடங்கியுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் முக்கிய பிரச்சினை என்னவென்றால், அதன் கடனாளிகளுக்கு பணம் செலுத்துவதற்கு மிகவும் குறைவான நாணய கையிருப்பே இலங்கையிடம் உள்ளது. இது முற்றிலும் மோசமான நாணய நிர்வாகம் மற்றும் மோசமான முதலீட்டு கொள்கை என்பதன் விளைவு எனவும் அவர் தெரிவித்துள்ளார். ஆகவே சகலருக்கும் இலங்கையின் பாதையில் செல்வதற்கான சாத்தியக்கூறுகளால் அச்சுறுத்தப்படுகிறார்கள். இது அனைவருக்கும் ஒரு பாடம் எனவும் அவர் கூறியுள்ளார்.

## “ஐ.எம்.எப் பேச்சு என்னா ஆச்சு”

சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் கலந்துரையாடல் மேற்கொண்டிருந்தது. இந்தக் கலந்துரையாடலின் பெறுபேறுகள் தொடர்பில் நாட்டு மக்கள் மிகவும் எதிர்பார்ப்புடன் இருக்கின்றனர். அரசாங்கம் இதுதொடர்பாக பாராளுமன்றத்துக்கு அறிவிக்கும் என்றே நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனால் இவ்வாறான எந்த அறிவிப்பும் இடம்பெறவில்லை. சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் மேற்கொண்ட பேச்சுவார்த்தை தோல்வி என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. குறிப்பாக அமெரிக்க ஊடகங்களே செய்தி வெளியிட்டிருந்தன. அதனால் இதன் உண்மை தன்மை தொடர்பில் நாங்கள் அறிந்துகொள்ள வேண்டியுள்ளது. இதுதொடர்பாக பாராளுமன்றத்தில் விசேட உரையொன்றை முன்வைப்பது நல்லது என கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.

இதன்போது பதிலளித்த அமைச்சர் பந்துல குணவர்தன, சர்வதேச நாணய நிதிய குழுவினருடன் ஜனாதிபதி, நிதி அமைச்சர், மத்திய வங்கி ஆளுநர் உட்பட அதிகாரிகள் பல சுற்று பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுவந்தனர். இந்தப் பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றம் தொடர்பாக பிரதமர் பாராளுமன்றத்துக்கு அறிவிப்பார் என்றார்.

## எட்டி உதைத்த இராணுவ அதிகாரி குறித்து விசாரணை

எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருந்த ஒரு குழு, நிலையத்தின் நடவடிக்கைகளுக்கு இடையூறு செய்ததாக எரிபொருள் நிரப்பு நிலையத்தின் உரிமையாளர் மற்றும் அதிகாரிகளின் கூற்றுப்படி தெரியவந்துள்ளதாக பேச்சாளர் கூறினார்.

பணியில் ஈடுபட்டிருந்த இராணுவம் மற்றும் பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்ததாகவும் அவர்களை தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு வேண்டுமென்றே எரிபொருள் நிலையத்தில் அமைதியின்மையை உருவாக்கி மோதலுக்கு அழைப்பு விடுத்திருக்கலாம் என அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர் என்றும் சம்பவம் தொடர்பில் இரண்டு சிவிலியன்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பேச்சாளர் தெரிவித்தார்.



பா. நிரோஸ்
ddnirosh@gmail.com



## கொள்ளையடித்த சொத்துகளே கொளுத்தப்பட்டன



மக்கள் பணத்தை கொள்ளையடித்து சேர்க்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் சொத்துகளே அண்மையில் கொளுத்தப்பட்டதாக எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (4) கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார், அவர் மேலும் கூறுகையில், ஊழல் மோசடி செய்து கொள்ளையடித்து சேர்த்த சொத்துகளை கொளுத்துவதில் தவறில்லை எனவும், கிராமிய மூலதன வங்கி என்கிற பெயரில் மத்திய வங்கியில் பதிவு செய்யப்படாத சட்ட விரோதமான வங்கி ஒன்றை பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் நடத்திச் செல்கிறார். இது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதன்போது குறுக்கீடு செய்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் கொளுத்தப்பட்டதை சமிந்த விஜேசிறி நியாயப்படுத்துகிறார். கொள்ளையடிக்கப்பட்ட சொத்துகள் தான் கொளுத்தப்பட்டன என்றால் எதிர்க்கட்சி ஆசனங்களில் அமர்ந்திருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களின் அனைவரது வீடுகளும் கொளுத்தப்பட்டிருக்கும் எனவும் தெரிவித்தார். இதற்கு பதிலளித்த சமிந்த விஜேசிறி எம்.பி,எதிர்க்கட்சியில் எவராவது கொள்ளையடித்து சொத்துகளை சேர்த்திருந்தால் அது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கலாம் என்றார்.

## இம்மாத இறுதியில் மீனவர்களின் எரிபொருள் பிரச்சினைக்கு தீர்வு

மீனவர்கள் எதிர்நோக்கும் எரிபொருள் பிரச்சினைக்கு இந்த மாதத்தின் இறுதியில் தீர்வு வழங்கப்படும் எனத் தெரிவிக்கும் கடற்றொழில் அமைச்சர் டக்லஸ் தேவானந்தா, இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறும் இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுவார்கள் எனவும் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமைகளுக்கு தற்போதைய அரசாங்கம் மட்டுமல்ல; இதற்கு முன்னர் ஆட்சியில் இருந்த அரசாங்கமும் பொறுப்பு கூற வேண்டும். எமக்கு கிடைக்கும் எரிபொருளை நாம் உரியவகையில் மீனவர்களுக்கு வழங்கி வருகிறோம். எனினும், இது போதாது என்பது எமக்கு தெரியும். இந்த மாத இறுதியில் மீனவர்களுக்கு தேவையான எரிபொருளை வழங்க முடியும்.

இந்திய மீனவர்கள் மீண்டும் இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து வருகின்றனர். அண்மையில் கூட ஒரு மீனவ படகையும் 12 இந்திய மீனவர்களையும் கைது செய்திருந்தோம். இந்த கைதுகள் தொடரும் எனவும் கூறினார்.

ரஷ்யா கூறும் விடயங்களை செயற்படுத்தினால்

# ரஷ்யாவின் உதவிகளை பெற்றுக்கொள்ள முடியும்



ரஷ்ய ஜனாதிபதிக்கு தான் அனுப்பிய கடிதத்துக்குப் பதில் கிடைத்துள்ளதாகவும், அந்தப் பதிலில் உள்ள விடயங்களை செயற்படுத்தினால் ரஷ்யாவிடம் இருந்து இலங்கைக்கு உதவிகளை பெற்றுக்கொள்ள முடியுமாக இருக்கும் என்றும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சபையில் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று (4) விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

நான் ரஷ்ய ஜனாதிபதி புட்டினுக்கு கடிதமொன்றை அனுப்பியிருந்தேன். எமது வர்த்தக கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் விமான போக்குவரத்துகள் நிறுத்தப்பட்டமை தொடர்பில் அந்தக் கடிதத்தை அனுப்பியிருந்தேன். எனது கடிதத்திற்கு பதில் கடிதம் வந்துள்ளது. அந்தக் கடிதத்தின் பிரதியை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அனுப்பியுள்ளேன்.

அந்தக் கடிதத்தில் மூன்று விடயங்கள் உள்ளன. அவை, இலங்கை அரசாங்கத்தால் செயற்படுத்தப்படக் கூடிய விடயங்களே. அதில் முதலாவது, குறிப்பிட்ட விமான சேவை நிறுவனம் தொடர்பான பிரச்சினையில் இலங்கை நடந்துகொண்ட முறை தவறாகும். அதனால் இதனை இராஜதந்திர மட்டத்தில் தீர்த்திருக்க வேண்டும். தொலைபேசியிலாவது தீர்த்திருக்க முடியும் என்று கூறப்பட்டுள்ளது.

அடுத்ததாக, இனிமேல் இவ்வாறு நடக்காது என்று உறுதியளிக்குமாறு கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மூன்றாவதாக, இலங்கையால் இல்லை என்று கூறும் அனைத்தையும் ரஷ்யாவில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும். அது தொடர்பிலும் அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது. ரஷ்ய அரசாங்கம் இலங்கைக்கு இது தொடர்பில் கடிதம் எழுத அவசியமில்லை. அங்குள்ள நிறுவனங்கள் எங்களின் நிறுவனங்களுக்கு கடிதம் எழுதி உதவிகளை பெற்றுக்கொள்ள முடியும். இதன்படி அந்தக் கடிதத்தில் உள்ள விடயங்கள் செய்யக் கூடியவையே. ஏன் அரசாங்கம் அதனை செய்யவில்லை என்பது தொடர்பில் கவலை அடைகிறேன் என்றார்.

## கடற்படைக்கு எரிபொருள் இல்லாததால் இந்திய மீனவர்கள் அத்துமீறுகின்றனர்

எரிபொருள் நெருக்கடியால் இலங்கை கடற்படையினருக்கு ரோந்து பணிகளில் ஈடுபடுவதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாகவும், இந்தச் சந்தர்ப்பத்தில் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்துள்ள ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர, இந்த அத்துமீறல்களை கட்டுப்படுத்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.



நேற்று (4) கடற்றொழில் அமைச்சரிடம்

பாராளுமன்றத்தில் கேள்வியெழுப்பி உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கடற்படையினருக்கு ரோந்து பணிகளில் ஈடுபடுவதற்கு போதுமான டீசல் இல்லை. இதனால் வடக்கு கடலில் பெரும் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. வடக்கிலுள்ள கடற்படையினருக்கு கடலில் ரோந்து நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாத நிலைமை காணப்படுகின்றது. இதனால் பெருமளவான இந்திய மீனவர்கள் இலங்கை கடலை ஆக்கிரமித்து பெருமளவில் மீன்பிடிக்கின்றனர். அத்துடன் இப்போது எமக்கு மீன் சாப்பிட முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. எமது மீனவர்கள் கடலுக்கு செல்வதற்கு டீசல் இல்லை. இந்நிலையில் இந்திய மீனவர்கள் எமது கடலில் செய்யும் அழிவுகள் தொடர்பில் கடற்றொழில் அமைச்சர் முன்னெடுக்கும் நடவடிக்கை என்ன? கடற்படையினருடன் இணைந்து இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படுமா? என்று கேட்டார்.

சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க

## நாம் தயாராகவே உள்ளோம்

மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள யோசனைகள் தொடர்பில் கலந்துரையாடி, சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு நாம் தயாராகவே இருக்கின்றோம் என்று எதிர்க்கட்சி பிரதம கொரடாவான ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெயல்ல சபையில் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று (4), நெருக்கடி நிலைமையில் பாராளுமன்ற அமர்வுகளை நடத்திச் செல்வது தொடர்பில் எழுந்த சர்ச்சையின் போது கருத்து வெளியிடும் போதே லக்ஷ்மன் கிரியெல்ல இவ்வாறு தெரிவித்துள்ளார். அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,"மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதிக்கு யோசனையொன்றை அனுப்பி வைத்துள்ளனர். இது தொடர்பில் கலந்துரையாடல்களை நடத்துவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். சகல கட்சிகளும் ஒன்றிணைந்து தேசிய அரசாங்கத்தை அமைக்கவும் நாங்கள் தயார்" என்றார்.



அத்தியாவசிய பொதுச் சேவைகள் தொடர்பான

## பிரகடனம் அனுமதிக்காக மன்றுக்கு வருகின்றது

1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச்சேவைகள் சட்டத்தின் 2 ஆம்பிரிவுக்கமைய ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் விடுக்கப்பட்ட கட்டளையுடன் தொடர்பான பிரகடனம் எதிர்வரும் 06 ஆம் திகதி விவாதமின்றி பாராளுமன்றத்தின் அனுமதிக்காகச் சமர்பிக்கப்படவுள்ளது.

நேற்று முன்தினம் (03) வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் இந்தக் கட்டளை விடுக்கப்பட்டது.

அதற்கமைய, இந்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் மின்சாரம் வழங்கல் தொடர்பான சேவைகள், பெற்றோலிய உற்பத்திகள், எரிபொருட்கள் வழங்கல் அல்லது விநியோகம், வைத்தியசாலைகள், நேர்சிங் ஹோம்கள், மருந்தகங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களில் நோயாளர்களின் பராமரிப்பு உள்ளிட்ட சுகாதார தொழிற்றுறையுடன் தொடர்புபட்ட சேவைகள் அத்தியாவசிய பொதுச்சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

## மக்களின் கண்களில் இருந்து மாயமானார் ஜனாதிபதி

நாட்டில் ஜனாதிபதியொருவர் இருக்கின்ற போதும், அவரை மக்களால் காண முடியாத நிலைமையே காணப்படுகின்றது என முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச சபையில் தெரிவித்துள்ளார். நாட்டை மேலும் நெருக்கடிக்குள் கொண்டு செல்ல இடமளிக்காது, கட்சிகளுடன் கலந்துரையாடி சர்வகட்சி அரசாங்கத்தை அமைத்து நாட்டினதும், சர்வதேசத்தினதும் நம்பிக்கையை வெற்றி கொள்ளும் வேலைத்திட்டத்திற்கு செல்ல நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுப்பதாகவும் தெரிவித்துள்ளார்.



பாராளுமன்றம் நேற்று (4) கூடிய போது, ஒழுங்குப் பிரச்சினையை முன்வைத்து உரையாற்றும் போதே வீரவன்ச இவ்வாறு கூறியுள்ளார்.

சாதாரண நிலைமையில் நாங்கள் இந்த பாராளுமன்ற கூட்டத்தை நடத்தவில்லை. முழு நாட்டிலும் எரிபொருள் இன்றி மக்கள் சுயமாகவே ஊரடங்குக்கு சென்ற நிலைமையே உள்ளது. ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அருகில் நீண்ட வாகன வரிசைகள் உள்ளன. இந்நிலையில் இன்றைய தினம் பாராளுமன்றத்தில் எம்.பிக்களின் கேள்விகளுக்கு பதிலளிப்பதற்கான தினமாக ஒதுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பிரச்சினைகள் கிடையாது. ஆனால் இந்தச் சபையில் பிரதமர் இருப்பதாக தெரியவில்லை. எரிசக்தி அமைச்சரும் இல்லை. இந்த நேரத்தில் முன்னர் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிப்பதற்கும் அப்பால் இப்போது நெருக்கடியால் துன்பப்படும் மக்களுக்கு யார் பதிலளிக்க போகின்றனர். நாட்டில் ஜனாதிபதி ஒருவர் இருக்கின்றார். அவர் மக்களின் கண்களுக்கு தெரிவதில்லை.

மக்கள் பெரும் நெருக்கடிக்குள் இருக்கின்றனர். அவர்களுக்கு ஏதாவது நிவாரணத்தை வழங்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகத் தெரியவில்லை. இந்த ஆட்சியின் மீது சர்வதேச நம்பிக்கை கிடையாது. ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக்கியதும் சர்வதேசத்தின் மனங்களை வெல்ல முடியும் என்றும் நினைக்க முடியாது. அவர் தேர்தலில் தோற்று தேசிய பட்டியலில் வந்த தனியொருவர். இவ்வாறானவரை பிரதமராக்குவதன் ஊடாக சர்வதேசத்தின் மனங்களை வெல்ல முடியாது என்றார்.

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 09 ஆம் பிரிவிற்கமைய பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**கம்பனியின் பெயர் :** ஜே. எம். எச். மோபைல் ஹெல்த் கேயார் சேர்விசஸ் அன்ட் லெபோடரிஸ் (பிரைவேட்) லிமிடேட்
**கம்பனி இல:** PV 00252288
**பதிவு அலுவலக முகவரி :** இல. 60 பி, நகர சபை , கல்முனை.
**கூட்டிணைக்கப்பட்ட திகதி :** 26.01.2022

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 09 ஆம் பிரிவிற்கமைய பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**கம்பனியின் பெயர் :** ஈஸ்ட் வெஸ்ட் கொன்னேக்சன்ஸ் பியூட்டி என்ட் எலிகன்ஸ் சலோன் (பிரைவேட்) லிமிடேட்
**கம்பனி இல:** PV 00226732
**பதிவு அலுவலக முகவரி :** இல. 16,3/3, பெல்கோன் கோர்ட் , அமரசேகர மாவத்தை, கொழும்பு - 05.
**கூட்டிணைக்கப்பட்ட திகதி :** 01.09.2020

### அட்டோனித் தத்துவத்தை இரத்துச்செய்தல்

வெள்ளவத்தை, புகையிரத வீதி, இல. 17, இல் வசிக்கும் சவ்கத் அலீ ஃபய்சால் ரஹுமான் (தே.அ.அ.இல 700382575V) ஆகிய என்னால் இலக்கம் 4078 மற்றும் 2016 ஜனவரி மாதம் 29 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட வெள்ளவத்தை, புகையிரத வீதி, இல. 17, இல் வசிக்கும் ரெஹியானா ஃபய்சால் (தே.அ.அ.இல 846910069V) என்பவருக்கு வழங்கப்பட்டிருந்த அட்டோனித் தத்துவ அதிகாரத்தை இதன் மூலம் முழுமையாக இரத்துச்செய்கிறேன் என்பதனை இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசிற்கும் அதன் வாழ் பொது மக்களுக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சவ்கத் அலீ ஃபய்சால் ரஹுமான**

### அட்டோனித் தத்துவத்தை இரத்துச்செய்தல்

ஆஸ்திரேலியா, VIC 3030, வெரிபீ, கூப் தெரு, இல. 8/8-10 இல் வசிக்கும் காரியவசம் கம்ஹேவகே தினுகீ எகியுலனீ த சில்வா (தே.அ.அ.இல 826711833V மற்றும் இலங்கை கடவுச்சீட்டு இலக்கம் N5157396) ஆகிய என்னால் 2020 ஆகஸ்ட் மாதம் 29 ஆம் திகதி ஆஸ்திரேலியாவில் கைச்சாத்திடப்பட்ட களணி, வராகொட, வீரசிங்ஹ மாவத்தை, இலக்கம் 3 இல் வசிக்கும் நிமல்கா சவனீதா த சில்வா திருமணத்திற்கு முன்பு விக்ரமரத்நே என்பவருக்கு வழங்கப்பட்டிருந்த அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு அட்டோனித் தத்துவ அதிகாரத்தை இதன் மூலம் முழுமையாக இரத்துச்செய்கிறேன் என்பதனை இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசிற்கும் அதன் வாழ் பொது மக்களுக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**கம்ஹேவகே தினுகீ எகியுலனீ த சில்வா**



எரிபொருள் பற்றாக்குறையால்

# நெருக்கடியில் ஓட்டோ ஓட்டுநர்

## அதிகாரிகளுக்கு மகஜர்

■ நூருள் ஹுதா உமர்

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் பற்றாக்குறையால் ஓட்டோ ஓட்டுநர்கள் பாரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், ஐக்கிய ஓட்டோ உரிமையாளர்கள் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள், அம்பாறை, சாய்ந்தமருது, மாளிகா சந்தியில் பதாதைகளை ஏந்திக்கொண்டு, நேற்று (04) ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

போதியளவு எரிபொருள் வழங்க வேண்டும் என்றும் எரிபொருளை முன்னுரிமை அடிப்படையில் தமக்கு பெற்றுக்கொடுக்குமாறும் அவர்கள் கோரிக்கை முன்வைத்தனர்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த ஓட்டோ ஓட்டுநர்கள், “நாங்கள் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக ஓட்டோ ஓட்டுநர்களாக தொழில் புரிகின்றோம். தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக



எங்களது நாளாந்த வருமானம் கேள்விக்குறியாகி உள்ளது.

“ஓட்டோ ஓட்டும் அன்றாடத் தொழிலை நம்பியே எங்களது குடும்பங்கள் வாழ்க்கைச் செலவை கொண்டு செல்கின்றன. பெட்ரோல் தட்டுப்பாடு காரணமாக, எங்கள் தொழிலை தொடர்ச்சியாக செய்ய முடியாதுள்ளது.

“எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மிக நீண்ட வரிசைகளில் நின்ற போதிலும் சிலவேளைகளில் எரிபொருள் கிடைப்பதும் இல்லை. எனவே, எங்களுக்கு எரிபொருளை பெற்றுக்கொள்ள பொருத்தமான முறைமை ஒன்றை செய்து தருமாறும் சம்பந்தப்பட்டவர்களை கேட்டுக்கொள்கிறோம்” என்றனர்.

எரிபொருள் நிரப்பு நிலைய முன்றலில் இருந்து பேரணியாக சென்ற ஓட்டோ ஓட்டுநர்கள், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக், சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.ஐ.எம். சம்சுதீன் ஆகியோரை சந்தித்து, மகஜரை கையளித்தனர்.

இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படுமென மேற்படி அதிகாரிகள் உறுதியளித்தனர்.



சைக்கிளை மோதிவிட்டு

# தப்பிய பஸ்ஸை மடக்கிய மக்கள்

## ஒருவர் படுகாயம்

■ க.விஜயரெத்தினம்

பெரியநீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மருதமுனை பிரதான வீதியில் நேற்று (04) காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

தனிப்பட்ட வேலையை முடித்துக் கொண்டு வீட்டுக்கு சைக்கிளில் சென்ற ஒருவரை, கல்முனையிலிருந்து -மட்டக்களப்புக்கு விரைந்து சென்ற தனியார் பஸ் விபத்தை ஏற்படுத்தித் தப்பிச் சென்றுள்ளது.

விபத்தில் காயமடைந்தவர், வீதியில் கிடப்பதை கவனிக்காமல் சென்ற குறித்த தனியார் பஸ்ஸை, அங்கிருந்த பொதுமக்கள் கூக்குரலிட்டு நிறுத்தியுள்ளதுடன், விபத்தை ஏற்படுத்தியவரை கவனிக்காமல் தப்பிச்சென்றமை கண்டிக்கதக்க விடயமென அங்கு கூடியிருந்த பொதுமக்களால் பஸ்ஸின் நடத்துநர் கடுமையாக எச்சரிக்கப்பட்டார்.

அத்துடன், காயப்பட்டவரை வைத்தியசாலைக்கு அனுப்பி அவருக்கு சிசிச்சையளிக்குமாறு, பொதுமக்கள் வலியுறுத்தியமையை அடுத்து அவர் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பெரியநீலாவணை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றார்கள்.



ஐஸ் போதைப்பொருளுடன்

# ஒருவர் கைது

■ பாறுக் ஷிஹான்

மோட்டார் சைக்கிளில் 20 கிராம் ஐஸ் போதைப்பொருளை கடத்திய சந்தேக நபரை, கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

மட்டக்களப்பு, வாழைச்சேனை காகித ஆலை இராணுவ புலனாய்வுப் பிரிவினரின் தகவலுக்கமைய, கல்முனை விசேட அதிரடிப்படையினர் நேற்று முன்தினம் (03) இரவு மேற்கொண்ட நடவடிக்கையில் சந்தேகநபரை கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர், கல்முனை பகுதியை சேர்ந்த 30 வயது மதிக்கத்தக்கவர் என்பதுடன், மட்டக்களப்பு, ஓட்டமாவடி பகுதிக்கு குறித்த போதைப்பொருளை கடத்தி செல்வதற்காக தயாராக இருந்த வேளை கல்முனை கடற்கரைப்பள்ளி அருகில் உள்ள மைதானத்தில் வைத்து சந்தேக நபர் கைதானார்.

இவ்வாறு கைதான சந்தேகநபரிடம் இருந்து இரு அலைபேசிகள், பொதி செய்யப்பட்ட 20 கிராம் ஐஸ் போதைப்பொருள், பயணம் செய்த மோட்டார் சைக்கிள் என்பன விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டன.

முன்னதாக சந்தேகநபரிடமிருந்து போதைப்பொருளை கொள்வனவு செய்வதற்காக வாழைச்சேனை காகித புலனாய்வு அதிகாரிகள் அழைப்பை ஏற்படுத்திய பின்னர் குறிப்பிட்ட இடமொன்றுக்கு வரவழைத்ததுடன், அவ்விடத்தில் மாறுவேடத்தில் சென்ற கல்முனை விசேட அதிரடிப்படையினரால் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபர், சான்று பொருட்களுடன் விசேட அதிரடிப்படையினர், கல்முனை பொலிஸாரிடம் நீதிமன்ற நடவடிக்கைக்காக பாரப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பில்

# துரித பெற்றோல் விநியோகம்

■ ரீ.எல்.ஜவ்பர்கான்



மட்டக்களப்பு நகரிலுள்ள லங்கா ஐ.ஓ.சி.எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் கடுமையான நோயாளர்களுக்கும் பெற்றோல், வழங்கப்படுவதாக எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் எம். செல்வராசா தெரிவித்தார்.

நாடு முழுவதிலும் எரிபொருளுக்கு கடுமையான தட்டுப்பாடு நிலவுகின்றபோதிலும் மட்டக்களப்பு லங்கா ஐ.ஓ.சீ எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எவ்விதத் தடைகளுமின்றி எரிபொருள் விநியோகம் சீரான முறையில் நடைபெற்று வருகின்றது.

இராணுவத்தினர், பொலிஸார், ஊடகவியலாளர்கள் முன்னிலையில், எரிபொருள் நிரப்பு நிலைய அதிபர் எம்.செல்வராசாவின் வழிநடத்திலில் மிகவும் நேர்த்தியாக நேற்று (04) காலை முதல் விநியோகம் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். சிறுவனுக்கு எமனாகிய ரம்புட்டான்

■ எம்.றொசாந்த்



காங்கேசன்துறை, கொல்லன்கலட்டியில் ரம்புட்டான் விதையை விழுங்கிய தர்மராசா தர்சிகன் எனும் 10 வயதுச் சிறுவன் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுவன், ரம்புட்டான் பழத்தை விழுங்கிய நிலையில், மூச்சு எடுக்க அவதிப்பட்ட போது, தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு நேற்று முன்தினம் (03) அழைத்துச் செல்லப்பட்டார்.

எனினும், சிறுவன் உயிரிழந்துவிட்டார் என்று வைத்திய அறிக்கையிடப்பட்டது.

கண்மூடித்தனமாக பஸ்ஸை செலுத்திய

# இ.போ.ச சாரதி நையப்புடைப்பு

■ சண்முகம் தவசீலன்





வவுனியாவில் இருந்து முல்லைத்தீவுக்கு வந்த வவுனியா சாலைக்கு சொந்தமான இ.போ.ச பஸ் ஒன்றை, நேர அட்டவணைக்கு மாறாக சாரதி எடுத்துச் செல்லமுற்பட்ட போது, நேற்று (04) காலை 11 மணியளவில் குழப்பமான நிலை ஏற்பட்டது.

குறித்த பஸ்ஸில் மக்கள் ஏறுவதற்கு முன்னதாகவே அதை கவனிக்காது பஸ்ஸை சாரதி செலுத்திய நிலையில், வீதியில் கூடிய ஏனைய சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் பஸ்ஸை மறித்தபோதும் அதனை பொருட்படுத்தாது பஸ்ஸை எடுத்துச் சென்றுள்ளார்.

இதன்போது மக்கள் சிலர் மீது பஸ் மோத முற்பட்டபோதும் பஸ்ஸில் ஏறிய பயணிகளையும் உரியவகையில் ஏற்றாதும் அபாயகரமான முறையில் சாரதி பஸ்ஸை எடுத்துச் சென்றார்.

இதனைத் தொடர்ந்து பஸ்ஸை துரத்தி சென்ற சிலர், அதை மறித்துள்ளதுடன் சாரதி மீது தாக்குதல் நடத்தியுள்ளார்கள்.

இதன்போது காயமடைந்த சாரதி, முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், பஸ்ஸை முல்லைத்தீவு பொலிஸ் நிலையம் கொண்டு சென்றுள்ளார்கள்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

முல்லைத்தீவுக்கு வந்த

# தமிழக அரசின் 2ஆம் உதவிகள்

■ சண்முகம் தவசீலன்

இந்திய தமிழக அரசின் உதவியில் வழங்கப்படும் இரண்டாம் கட்ட நிவாரண பொருட்கள், நேற்று (04) முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தை வந்தடைந்துள்ளன. அவற்றை முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் க.விமலநாதன் பெறுப்பேற்றார்.

இதன்போது கருத்து தெரிவித்த முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர், “தமிழக முதலமைச்சரின் அனுசரணையுடன் இரண்டாம் கட்ட அரிசி வந்துள்ளது. 65 ஆயிரம் கிலோ கிராம் அரிசி தற்போது கிடைத்துள்ளது. இதனை மிகவும் வறுமைப்பட்ட 6,500 குடும்பங்களுக்கு தலா பத்து கிலோ கிராம் வீதம் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

“இதன்படி, முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கரைதுறைப்பற்று பிரதேசத்தில் 2,004 குடும்பங்களுக்கும், துணுக்காய் பிரதேசத்தில் 572 குடும்பங்களுக்கும், மாந்தை கிழக்கில் 417 குடும்பங்களுக்கும், ஒட்டிசுட்டான் பிரதேசத்தில் 1,023 குடும்பங்களுக்கும், புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் 1,962 குடும்பங்களுக்கும், வெலிஓயா பிரதேசத்தில் 522 குடும்பங்களுக்கும் இந்த அரிசி பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாக தெரிவித்தார்.

> **“ 65 ஆயிரம் கிலோ கிராம் அரிசி தற்போது கிடைத்துள்ளது. இதனை மிகவும் வறுமைப்பட்ட 6,500 குடும்பங்களுக்கு தலா பத்து கிலோ கிராம் வீதம் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம்**





# கொள்ளை விலையில் டீசல்

■ எம். றொசாந்த்

யாழ்ப்பாணம், அளவெட்டி பகுதியில் டீசலை பதுக்கி வைத்திருந்து, அதிக விலைக்கு விற்பனை செய்த ஒருவரை, தெல்லிப்பழை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அளவெட்டி பகுதியில் உள்ள கடை ஒன்றில் டீசலை பதுக்கி விற்பனை செய்வதாக பொலிஸாருக்கு கிடைத்த புலனாய்வுத் தகவலின் அடிப்படையில் சோதனை நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபட்டனர்.

இதன்போது 291 லீற்றர் டீசல், விற்பனைக்கு பயன்படுத்திய உபகரணங்கள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதோடு, டீசலை பதுக்கி வைத்திருந்த குற்றச்சாட்டில் 42 வயதுடைய கடை உரிமையாளரையும் பொலிஸார் கைது செய்தனர்.



# இந்திய மீனவர்கள் 12 பேர் கைது

■ செந்தூரன் பிரதீபன்

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 12 பேர் இலங்கை கடற்படையினரால் நேற்று முன்தினம் (03) மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட மீனவர்கள், மயிலாடுதுறை, காரைக்கால் பகுதியைச் சேர்ந்தவர்கள் என கடற்படையினர் தெரிவித்தனர்.

இவர்கள் ஒரு விசைப்படகுடன் பருத்தித்துறை கடற்பரப்புக்குள் நுழைந்து மீன்பிடித்துக் கொண்டிருந்த போதே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்களை பருத்தித்துறை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# வஞ்சிக்க வேண்டாம்

எஸ்.கணேசன்

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் அதற்கான பதில்கள், மக்கள் கோரிக்கைகள் உள்ளிட்டவற்றை அரசாங்கத்தின் காதுகளுக்கும், பதில்களை மக்களின் காதுகளுக்கும் கொண்டு சேர்ப்பதில் மிகமுக்கியமான பங்கு ஊடகத்துறையைச் சார்ந்ததாகும் எனத் தெரிவித்துள்ள நுவரெலியா மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் தேசிய அமைப்பாளரும் ஊடகவியலாளருமான சுப்பிரமணியம் தியாகு, ஊடகவியலாளர்களுக்கு முறையாக எரிபொருள் கிடைப்பதற்கு வழிசமைக்க வேண்டுமென கோரியுள்ளார்.

அத்தியாவசிய சேவையாக ஊடகத்துறையையும் கருதி முறையான திட்டமொன்றை அரசாங்கம் வகுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ள அவர், பல மணித்தியாலங்களாக அல்லது பல நாள்களாக வரிசைகளில் நின்று எரிபொருட்களை பெற்றுக்



கொள்ள ஊடகவியலாளர்களால் முடியாது. ஏனெனில் இரவு, பகல் பாராது களத்தில் நிற்பதால், வரிசையில் நின்று காலத்தை வீணடிக்க முடியாது என்றார்.

ஹட்டன் ஸ்ரீ கிருஸ்ண பவானில் நேற்று (04) நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர், ஊடகவியலாளர்கள் எரிபொருட்களை பெற்றுக் கொள்வதற்கு எந்தவிதமான திட்டமும் அரசாங்கத்திடம் இல்லையென குற்றஞ்சாட்டினார்.

அநேகமான சேவைகளை அரசாங்கம் அத்தியாவசிய தேவைகளாக பிரகடனப்படுத்தியுள்ளது. ஆனால் ஊடகத்துறையை அத்தியாவசிய தேவையாக கருதுகின்றதா? என்ற கேள்வி எமக்கு எழுகின்றது.

அரசாங்க தகவல் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டையின் ஊடாக, ஊடகவியலாளர்களுக்கான எரிபொருட்களை மிகவும் இலகுவான முறையில் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க முடியும்.

பிரதேச ஊடகவியலாளர்களால் ஓரிடத்தில் இருந்துகொண்டு செய்திகளை சேகரித்து ஊடக நிறுவனங்களுக்கு அனுப்பமுடியாது. கட்டாயமாக களத்துக்குச் செல்லவே வேண்டும். எரிபொருட்கள் இன்மையால், களத்துக்குச் செல்லமுடியாத துர்ப்பாக்கிய நிலைமையொன்றும் அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. ஊடகவியலாளர்களுக்கு எரிபொருள் கிடைக்கும் வகையில் முறையான திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்கவேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ளார்.

## இராணுவ சிப்பாயின் கைக்கு வெட்டு

அஜித்லால் சாந்தஉதய

எம்பிலிப்பிட்டியவில் ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் பாதுகாப்பு கடமையில் இருந்த இராணுவ சிப்பாயின் கையை பதம்பார்த்தவரைத் தேடி பொலிஸார் வலைவிரித்துள்ளனர்.

கடந்த 3 ஆம் திகதியன்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் வெட்டுக்காயங்களுக்கு இலக்கான இராணுவ சிப்பாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அந்த எரிபொருள் நிரப்பும் நியைத்தில் ஏற்பட்டிருந்த நெருக்கடியான நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு முயன்ற போதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அந்த எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு பிற்பகல் வேளையில் வந்த எரிபொருள் வரிசையில் நின்றிருந்தவர்களுக்கு விநியோகிக்கப்பட்டது. மாலை வேளையில் எரிபொருள் தீர்ந்துவிட்டது. இதுதொடர்பில் பொலிஸார் அறிவிப்பொன்றை விடுத்தனர்.

எனினும், வரிசையில் காத்திருந்தவர்கள் எரிபொருள் நிலையத்தை ஆக்கிரமிக்கத் தொடங்கிவிட்டனர். இதனால் பதற்றமான நிலைமையொன்று ஏற்பட்டது. அங்கு பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த இராணுவ சிப்பாய், நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயன்ற போதே, கத்தி வெட்டுக்கு இலக்காகியுள்ளார்.

## பட்டினியால் பிள்ளைகள் அழ, நடுவீதியில் தேம்பியழுத தந்தை

சாப்பாட்டு இல்லாமையால், தன்னுடைய பிள்ளைகள் பால் கேட்டு அழுவதை பார்த்துக்கொண்டிருக்க முடியாது எனத் தெரிவித்து இரண்டு பிள்ளைகளின் தந்தையான 37 வயதானவர், ஹெம்மாத்தகம பிரதான நகரின் நடுவீதியில், தேம்பியழுது கொண்டிருந்தார்.

பதாகையொன்றை வைத்து, அழுதுகொண்டிருந்த அவரை பார்த்த பொலிஸார், வர்த்தகர்கள், நகரத்தில் இருந்தவர்கள், அவருக்குத் தேவையான உணவுப் பொருட்களை வாங்கிக்கொடுத்தனர்.

மேசன் வேலை செய்யும் அவருக்கு 7 வயதில் பெண் பிள்ளையும் 13 வயதில் ஆண்ணொருவரும் இருக்கின்றனர். அவருடை மனைவிக்கு வேலையில்லை. பொருளாதார நெருக்கடி காரணமாக சீமெந்து விலை அதிகரித்துள்ளது. இதனால், அவருக்கு முறையாக வேலைக்கிடைப்பதில்லை.

“மேசன் சங்கமே பொறுமை காத்தது போதும், பொருட்களின் விலைகளை குறைத்து, ஏழ்மையானவர்களுக்கு நிவாரணம் கொடு” என்றே அந்த பதாகைளில் எழுதப்பட்டிருந்தது.






7 வயதான பெண் பிள்ளை, பால் கேட்டு அழுகிறது. பிள்ளைகளுக்கு பால் மட்டுமல்ல, தன்னுடைய குடும்பத்தில் சகலருக்கும் நாளாந்தம் மூவேளையும் சாப்பிடுவதற்கு ஒன்றுமே இல்லை. எனக்கு வேலைக்கிடைப்பதில்லை என்பதால், பிள்ளைகளை வளர்க்கமுடியவில்லை” என்றார்.

பிரதான வீதியில் அமர்ந்திருந்தவரின் அருகில் சென்று பொலிஸார் விசாரித்தனர். அதன்பின்னர், அங்கு குழுமியிருந்தவர்கள் இன,மத,மொழி பேதங்களை மறந்து, தங்களால் இயன்ற உதவிகளைச் செய்தனர். கிடைத்த உதவிகளைக் கொண்டு, அந்நபருக்கு தேவையான பொருட்களை பொலிஸாரும், பொதுமக்களும், வர்த்தகர்களும் பெற்றுக்கொடுத்தனர்.

அதன்பின்னர், பொருட்களை ஏற்றிக்கொண்டு அங்கிருந்து வீட்டுக்குச் செல்வதற்கும் வாகன உதவியும் செய்துகொடுக்கப்பட்டது.

## விதானையார் மீதான தாக்குதலைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்

ராமு தனராஜா

விதானையார் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்துடன் எட்டுப்பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என லுணுகலை பொலிஸார் தெரிவித்துள்ளதுடன், அந்தத் தாக்குதல் சம்பவத்தை கண்டித்து, அதிகாரிகள் ஆர்ப்பாட்டத்தில் நேற்று (04) ஈடுபட்டனர்.

லுணுகல பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் லுணுகலை கிராம சேவக உத்தியோகத்தர்களும் இணைந்து லுணுகலை பிரதேச சபைக்கு முன்பாக இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

லுணுகலை எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு முன்பாக, எரிபொருளை பெற்றுக் கொள்வதற்காக காத்திருந்த வாகன சாரதிகளால் லுணுகலை பிரதேச கிராம உத்தியோகத்தர் ஒருவர் நேற்றுமுன்தினம் (03) இரவு 10.30 மணியளவில் தாக்கப்பட்டுள்ளார்.

லுணுகலை பிரதேசத்திற்கு எரிபொருளை கொண்டு வருவதற்கு குறித்த கிராம உத்தியோகத்தர் முயற்சி செய்யவில்லை என்று கூறியே தாக்கியதாக, லுணுகலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.



## கவனம்...

மலையகத்தில் ஆங்காங்கே கடுமையான மழை பெய்வதுடன் வெள்ளப்பெருக்கு, மண்சரிவு, பாறாங்கற்கள் புரண்டு விழுதல், பனிமூட்டம் ஆகியன நிலவுவதால், பொதுமக்களும் வாகனங்களின் சாரதிகளும் மிகவும் அவதானமாக இருக்கவேண்டுமென பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

## இது வெறுமனே படமல்ல; நிஜம்!

பிரியங்கர ஜாதுங்கம

கர்ப்பிணி தாயொருவரை வைத்தியசாலைக்கு ஓட்டோவில் ஏற்றி சென்று கொண்டிருந்த போது, அந்த ஓட்டோவில் எரிபொருள் தீர்ந்துவிடவே, கலவான பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் அதிகாரியொருவர், தன்னுடைய மோட்டார் சைக்கிளில் இருந்து எரிபொருளை எடுத்துக்கொடுத்தார்.



இரத்தினபுரி வைத்தியசாலைக்கு கர்ப்பிணி தாயை அழைத்துச் சென்றுக்கொண்டிருந்த போதே, மேற்படி சம்பவம் நேற்று (04) இடம்பெற்றுள்ளது.

சீருடையில் இருந்துகொண்டு பல்வேறான மோசடிகளில் ஈடுபடுபவர்களுக்கு மத்தியில் மனிதாபிமானத்துடன் செயற்படும் இவ்வாறான அதிகாரிகளும் இருக்கத்தான் செய்கின்றனர் என பிரதேசவாசிகள் புகழ்ந்துள்ளனர்.

## போத்தலை உடைத்து தீ மூட்டிய 4 பேர் கைது

மஹேஸ் கீர்த்திரத்ன

மாத்தளை, வரகாமுர பிரதேசத்தில், கூடுதலான விலைக்கு விற்பனை செய்வதற்காக எரிபொருள் பதுக்கிவைக்கப்பட்டுள்ளதாக கிடைத்த தகவலையடுத்து அந்த இடத்தை சுற்றிவளைக்கச் சென்ற பொலிஸ் அதிகாரிகளுக்கு இடையூறு விளைவித்து, குழப்பங்களை ஏற்படுத்தினர் என்ற குற்றச்சாட்டின் கீழ் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அந்த இடத்தை பொலிஸார் சுற்றிவளைக்கச் சென்றிருந்த போது, அங்கிருந்த நபரொருவர் பெட்ரோல் போத்தலொன்றை உடைத்து வீசியுள்ளார். மற்றுமொருவர் அந்தப் போத்தலுக்கு தீ மூட்டியுள்ளார். அதிலிருந்து எழும்பிய தீயால், ஒருவரின் பாதம் தீக்காயங்களுக்கு உள்ளாகியுள்ளது.

ஏனைய இருவரும், அந்த போத்தலை தூக்கி, எரிபொருள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த இடத்தின் மீது வீசியுள்ளார். இதனால் அந்த இடமே தீயில் கருகி நாசமாகியுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என மாத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.



## இடைச் செருகலால் பெரும் பதற்றம்

மலைவாஞ்ஞன்

ஹட்டனிலுள்ள ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பும் நிலையத்தின் ஊடாக ஒரு வாரத்துக்குப் பின்னர், எரிபொருள் விநியோகம் முன்னெடுக்கப்படுகின்றது. அந்த நிலையத்துக்கு நேற்று (04) அதிகாலை 2 மணியளவில் எரிபொருள் பௌசர் வந்தது.

எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக, நீண்ட வரிசையில் வாகனங்கள் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன. எனினும், வரிசைக்கு இடையில் வாகனங்களை செருக முயன்றமையால் சில சந்தர்ப்பங்களில் பதற்றமான நிலைமை ஏற்பட்டிருந்தது.

எனினும், பொலிஸாரும் பாதுகாப்பு படையினரும் அங்கு கடமையில் இருந்த பணியாளர்களும் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். அதன்பின்னர், நேற்று (04) நண்பகலுக்குப் பின்னர், நிலைமை வழமைக்குத் திரும்பியது.

எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக, கடந்த இரண்டு, மூன்று நாள்களாக பலரும் காத்திருந்தனர். எரிபொருள் வந்திருப்பதை கேள்வியுற்ற பலரும் தங்களுடைய வாகனங்களுடன் அந்த எரிபொருள் நிலையத்தை நோக்கி படையெடுத்தனர். இதனால், ஹட்டன் நகரிலும் குறுக்கு வீதிகள் உள்ளிட்ட ஏனைய வீதிகளிலும் கடுமையான வாகன நெரிசல் ஏற்பட்டிருந்தது.

## தபால் நிலையங்கள் முழுமையாய் முடங்கின

ரஞ்சித் ராஜபக்ஷ

தங்களுக்கு முன்னுரிமை கொடுத்து எரிபொருளை பெற்றுக்கொடுக்குமாறும் இன்னும் பல கோரிக்கைகளை முன்வைத்தும் தபால் ஊழியர் தொழிற்சங்கங்களால் முன்னெடுக்கப்படும் தொழிற்சங்க போராட்டம் நேற்றும் (04) தொடர்ந்தது. இந்தப் போராட்டம் ஜூன் 29ஆம் திகதியன்று ஆரம்பிக்கப்பட்டது.

இதனால், நுவரெலியா மாவட்டத்திலுள்ள சகல தபால் நிலையங்கள், உப- தபால் நிலையங்கள் உள்ளிட்டவற்றின் சேவைகள் யாவும் முழுமையாக ஸ்தம்பிதமடைந்துள்ளன.



## இலைகளுடன் ஆர்ப்பாட்டம்



என். ஆராச்சி

‘74 வருட சாபத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து, மக்கள் ஆட்சியைக் கட்டியெழுப்புவோம்’ எனும் தொனிப்பொருளில், ஐக்கிய மக்கள் சக்தியால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று கேகாலை கலிகமுவ, தமுனுபொல கிராமத்தில் முன்னெடுக்கப்பட்டது.

அந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றிருந்தவர்கள், இந்த அரசாங்கத்துக்கு எதிரான வாசகங்களை இலைகளில் எழுத்தியிருந்தனர். அத்துடன், பிரதான பதாகையை, தென்னம் ஓலையில் பின்னப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 5 கஜமுத்து; ஐவர் கைது

சுமணசிறி குணதிலக்க

100 இலட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்வதற்காக வைத்திருந்த ஐந்து கஜமுத்துக்களுடன் ஐவர் கைது செய்யப்பட்டுள்ள சம்பவம், மொனராகலையில் இடம்பெற்றுள்ளது.

கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து, பொலிஸாரால் அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

பதுளையிலிருந்து லொறியொன்றின் ஊடாக, மொனராகலைக்கு இந்த கஜமுத்துக்கள் எடுத்துவரப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட ஐவரில், காலி பொலிஸ் பயிற்சி பாடசாலையில் சேவையாற்றும் அம்பாறையைச் சேர்ந்த பொலிஸ் சார்ஜன்ட், பிபிலையைச் சேர்ந்த ஓய்வுபெற்ற இராணுவ சிப்பாய், மாத்தளைச் சேர்ந்த சாரதி மற்றும் உதவியாளர், தியத்தலாவைச் சேர்ந்த மற்றுமொருவர் என ஐவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

3ஆம் திகதியன்று கைது செய்யப்பட்ட ஐவரையும், இன்று (05) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என மொனராகலை பொலிஸார் தெரிவித்தனர்.



# தலைவலியும் காய்ச்சலும் தனக்கு வரும் போதுதான் தெரியும்

வீட்டில் ஓரளவுக்கு விளங்கிக்கொள்ளக் கூடிய சகோதர, சகோதரிகள் இருப்பார்களாயின், கேலி கிண்டலுக்கு குறைவே இருக்காது. கடுமையான தலைவலி அல்லது பல்வலி ஒருவருக்கு ஏற்படுமாயின், "என்னமோ தலைவலியாம்; தலைவலி இன்றேல் பல்வலியாம் பல்வலி" என, நோய்வாய்பட்டிருப்பவரை பார்த்து மற்றையவர் கிண்டல் செய்வது வழமை. அதுவே மாறியும் நடக்கும்.

ஆக, வருத்தமெல்லாம் தனக்கு வந்தால்மட்டும்தான் புரியும். அதனால்தான், 'தலைவலியும் காய்ச்சலும் தனக்கு வரும்போதுதான் தெரியும்' எனக் கூறியுள்ளனர்.

இந்தக் கூற்றை நியாயப்படுத்துவதாய் தென்னிலங்கையில் பல சம்பவங்கள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. வடக்கு, கிழக்கை பொறுத்தவரையில் அது சர்வசாதாரணமாகும்.

குருநாகல், யக்கபிட்டியவில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில், இராணுவ அதிகாரி ஒருவரால் பொதுமகன் ஒருவர் எட்டி உதைக்கப்பட்ட காட்சி அடங்கிய வீடியோ வைரலாகியுள்ளது.

ஒருவர், மற்றொருவர் மீது தாக்குதல் நடத்துவதே குற்றமாகும். அதிலும், இருவர் பிடித்திருக்க, இராணுவ அதிகாரியொருவர் எட்டி உதைக்கின்றார்.

எரிபொருள் நெருக்கடிக்குள் இது முதலாவது சம்பவமல்ல. வறக்காப்பொலயில், பொலிஸ் அதிகாரியொருவரை இராணுவ சிப்பாயொருவர் முகத்தில் குத்திய சம்பவமும் இடம்பெற்றுள்ளது.

முதலாவது சம்பவத்துக்கு உரிய முறையில் தண்டனை வழங்கப்பட்டிருந்தால், எட்டி உதைக்கும் சம்பவத்தை எதிர்பார்த்திருக்கவே முடியாது. ஓரளவுக்கேனும் ஒழுக்கத்துடன் நடந்துகொண்டிருப்பர். இல்லையேல் அதற்கான பயம் ஏற்பட்டிருக்கும். ஆக, உடனடியாகத் தண்டனை வழங்கப்படாமையும் சம்பவங்கள் அதிகரிப்பதற்கு காரணமாகும்.

தங்களுடைய உறவுகளுக்கு எதிரான உரிமை மீறல்களுக்கு நியாயம் கேட்டு, தமிழர்கள் குரல்கொடுத்தபோது, 'கழுத்தை அறுப்பேன்' என சைகைகளில் காண்பித்த லண்டனிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தில் கடமையாற்றிய பிரிகேடியர் பிரியங்கர பெர்ணான்டோ, நாடு திரும்பியதன் பின்னர் மேஜர் ஜெனரலாக பதவி உயர்த்தப்பட்டார். அவருடைய சித்திரங்களை சுவர்களில் காணலாம்.

ஆனால், எட்டி உதைத்த இராணுவ அதிகாரிக்கு எதிரான எதிர்ப்புகள் தென்னிலங்கையில் வலுப்பெற்றுள்ளன. ஆக, தங்களுடைய இனத்துக்கு வரும்போதுதான் அதன் வலியும் வேதனையும் புரிகின்றது.

பாதுகாப்பு கடமைகளில் இருப்போரே, ஒருவருடன் ஒருவர் மோதிக்கொள்ளும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இது சிவிலியன்களுக்கு எதிராகத் திரும்புவதற்கு வெகு காலம் எடுக்காது.

ஆக, எந்தவோர் இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களுக்கான உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பங்களில் எல்லாம், பாதிக்கப்பட்டவர் தரப்புக்காக உரிமை குரல் கொடுக்கவேண்டும்.

'கழுத்தை அறுப்பேன்' என சைகை காட்டியவரை புகழ்பாடியவர்கள், எட்டி உதைத்த இராணுவ அதிகாரியை நிந்திப்பது, பாதிக்கப்பட்ட தரப்பினர், வெவ்வேறு இனங்களைச் சேர்ந்தவர்களாக இருப்பதால் மட்டுமேயாகும்.

இரண்டாம்பட்சமாக பார்க்கும் இந்த நிலைமை இல்லாதொழிக்கப்படும் வரையிலும், உரிமைகள் மீறப்படுவதை தடுக்கமுடியாது என்பதே அனுபவ உண்மையாகும்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

மிகப் பரந்த வர்ணக் கலவையுடன், மிக நீண்ட அழகான வளைவுகளுடன் வானவில். வர்ணங்களின் சாகசங்களில் இத்தனை பிரமாண்டமா? இதை எவர்தான் வரைந்தார்கள்? இயற்கைக்கும் வர்ணம் தீட்டத் தெரியுமோ?

மழைக்காலத் தூறலில் சூரிய ஒளியும் புணர்ந்தால், இத்தனை பாரிய வானக்கடதாசியில் நீட்சியான ஓவியம்; மயக்க வைக்கிறது.

இயற்கைக்கு நிறைய ஆசைகள் உண்டு. அழகைப் பிரசவித்த வானின் வளைவுடன் மகிழ்விக்கப் புறப்பட்டதே வர்ண ஜாலங்கள். இலவசமாகத் தரப்பட்டதை ரசித்திடுங்கள். சற்று நேரத்தில் மறைந்துவிடும்.

காலம் பொன்னானது. எனவே, உடன் ரசித்து மகிழ்ந்துவிடு. விழிகளை மூடாமல் அனுபவித்துவிடுங்கள்.

இயற்கை பெரும் படைப்பாளி. உலகுக்கு இலவசமாக வழங்கும் கொடையாளி! மனிதர் என்ன ஜடமா? பேரழகானவைகளை இயற்கையில் இருந்து காணாதிருப்பதற்கு! கவலைகளை கழற்றிவிடு. கவலை, ஏக்கம், பயம் ஏற்பட்டால், இயற்கையோடு உன்னை இணைத்துவிடு. எங்கும் பரந்ததே இயற்கை படைப்புகள். இயற்கையிடமிருந்து எத்தனைகோடி நலன்கள். உலகே அற்புத அழகு; இனி என்ன வேண்டும்?

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

நடவடிக்கை எடுக்காத

### நட்டாங்கண்டல் பொலிஸ் நிலையம்

முல்லைதீவு, மாந்தை கிழக்கு பிரதேசத்தில், வாழ்வாதாரத்துக்காக வளர்க்கப்டும் கால் நடைகள், அண்மைய நாள்களாக திருட்டுப்போகின்றன. அத்துடன், தொடர்சியாக குற்றச்செயல்களும் அதிகரித்துக் காணப்படுகின்றன.

விதவைப் பெண்கள், வறிய மக்கள் தமது வாழ்வாதாரத்துக்காக வளர்க்கும் கால் நடைகள், விவசாய உபகரணங்கள், வீட்டுப் பொருட்கள் என்பன களவாடப்பட்டு வருகின்றன. இவ்வாறான திருட்டுகள் தொடர்பில், பிரதேச மக்களால் நட்டாங்கண்டல் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்வதற்கு செல்லும் போது, இது தொடர்பிலான முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளாமல், மக்கள் திருப்பி அனுப்பப்படுகிறார்கள் என்றும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

இரவோடு இரவாக வரும் இனந்தெரியாத நபர்கள், கால்நடைகள், நீர் இறைக்கும் இயந்திரங்கள் என்பவற்றைத் தொடர்ச்சியாக களவாடி வருகின்றார்கள். இதுகுறித்து, பிரதேச பொலிஸ் நிலையமான நட்டாங்கண்டல் பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடு பதிவு செய்யச் செல்லும் வேளை, பொலிஸாரால் தங்களின் முறைப்பாடு ஏற்றுக்கொள்ளப்படாமல், "குறித்த இடத்துக்கு வருகைதந்து பார்ப்பதற்கு, எங்களிடம் எரிபொருள் இல்லை" என்று கூறி, முறைப்பாட்டடை ஏற்றுக்கொள்ளாமல், திருப்பி அனுப்புகின்றனர் என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

எனவே, இக்கிராம மக்களின் பாதுகாப்புக்குப் பொறுபானவர்கள், விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

யது பாஸ்கரன்

உலகிலும் இலங்கையிலும்

# பிளவுபட்டுள்ள முஸ்லிம் சமூகம்

மொஹமட் பாதுஷா

ஒரு சமூகம் தனது அரசியல், சமூக உரிமைகளை வென்றெடுப்பதற்கும் ஏனைய எல்லா விதமான முன்னேற்றங்களை அடைந்து கொள்வதற்கும், அச்சமூகத்தின் மத்தியில் நிலவும் ஒற்றுமை அடித்தளமாக அமைகின்றது.

ஒற்றுமைப்பட்ட ஓர் இனக்குழுமம் அனைத்துத் துறைகளிலும் சரியாக கட்டமைக்கப்பட்டு இருப்பதுடன், அதன் கட்டுக்கோப்பு குலைந்து விடாமல் பலமானதாகவும் இருக்கும்.

அந்த வகையில், இலங்கை முஸ்லிம் சமூகத்திடையே இந்த இலட்சணங்களைக் காண முடியாதுள்ளது. முஸ்லிம் சமூகம் சரியாகக் கட்டமைக்கப்படவும் இல்லை; சரிவரக் கட்டுக்கோப்புடன் நின்று போராடுவதையும் காண முடியாதுள்ளது.

அரசியல், சமூகம், சிவில் விடயங்கள், இனம், மதம், கலாசாரம், புவியியல், உரிமை என எல்லா விவகாரங்களிலும், முறையாகக் கட்டமைக்கப்படாத சமூகமாகக் காலத்தைக் கழிப்பதால், முஸ்லிம்கள் தமது அபிலாஷைகளை அடைந்து கொள்வதில் பெரும் பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளன.

இது, ஆட்சியாளர்கள், முஸ்லிம்களை பிரித்தாளுவதை இலகுவாக்கி இருக்கின்றது. வெளிச்சக்திகள் முஸ்லிம் சமூகத்துக்குள் புகுந்து விளையாடுவதற்கும் தம்முடைய சொந்த நிகழ்ச்சி நிரல்களை நிறைவேற்றிக் கொள்வதற்கும், ஏதுவான களநிலையை ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றது.

'ஒற்றுமையின் கயிற்றைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்' என்று இஸ்லாமிய சமயம் கூறுகின்றது. இருப்பினும் எல்லா சமூகங்களையும் போல, முஸ்லிம்களுக்குள்ளும் அதிக பிரிவுகள், ஒற்றுமையின்மை, கட்டுக்கோப்பற்ற தன்மை என்பன வியாபித்துள்ளன.

இலங்கை முஸ்லிம்களிடையே மட்டுமன்றி, முஸ்லிம் நாடுகள், முஸ்லிம் சமூகத்தின் மத்தியிலும் இவ்விதமான பண்புகளையே அவதானிக்க முடிகின்றது.

ஒரு முஸ்லிம் நாட்டின் புவிசார் அமைவிடம், நட்பு நாடுகள், வளம், ஆட்சிமுறை, அரசியல் எனப் பல காரணங்களின் அடிப்படையில், ஒவ்வொரு நாடும் வெவ்வேறு நிலைப்பாடுகளை எடுப்பதால், உலகளவிலான முஸ்லிம்களின் ஒற்றுமையும் சீர்குலைந்துள்ளது.

இலங்கை போன்ற பல நாடுகளில், முஸ்லிம்கள் சிறுபான்மை இனமாக வாழ்கின்ற போதிலும், உலகில் முஸ்லிம் பெரும்பான்மையைக் கொண்ட 30 நாடுகள் உள்ளன. இஸ்லாம் சமயத்தைப் பின்பற்றுகின்ற 20 பில்லியனுக்கும் அதிகமான மக்கள் உலகெங்கும் வாழ்கின்றனர். இதுதவிர, கணிசமான முஸ்லிம் நாடுகள் எண்ணெய் உள்ளிட்ட கனிய வளத்தைக் கொண்டிருக்கின்றன. அதிக இடப்பரப்பும் கனிமங்களும் அங்குள்ளன. முஸ்லிம் நாடுகளிடையே பல அமைப்புகளும் கூட்டமைப்புகளும் உள்ளன.

இவை எல்லாவற்றையும் தொகுத்துப் பார்த்தால், இவை அனைத்தும் மிகப் பெரிய பலமாகும். உலகில் வாழ்கின்ற பெரும்பாலான இன, மத குழுமங்களைச் சேர்ந்த மக்களுக்கு கிடைக்காத வரப்பிரசாதங்கள் எனலாம். எனவே, இதனை வைத்து எவ்வளவோ விடயங்களைச் சாதிக்க முடியும்.

உலக முஸ்லிம் நாடுகளிடையே சரியான கட்டமைப்பும், பரஸ்பர ஒத்துழைப்பும் இருக்குமானால் இலங்கை, இந்தியா போன்று சிறுபான்மையாக முஸ்லிம்கள் வாழ்கின்ற நாடுகளில், அம்மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்படுகின்ற வன்கொடுமைகளைத் தடுத்து நிறுத்தலாம்; ஏழை முஸ்லிம் நாடுகளுக்கு உதவலாம். இஸ்லாம் பற்றிய, முஸ்லிம்கள் பற்றிய தவறான தோற்றப்பாட்டை நீக்கலாம். இஸ்லாத்தின் பெயரால் இயங்குகின்ற அடிப்படைவாதக் குழுக்கள், பயங்கரவாத இயக்கங்களை ஒழிக்கலாம். முஸ்லிம்களிடையே தேவையற்ற மதப் பிரிவுகள் உருவாவதை தடுக்கலாம்.

இவ்வாறு இன்னும் எத்தனையோ விடயங்களை செய்யலாம். இது உலகில் முஸ்லிம்கள் தலைநிமிர்ந்து வாழ்வதற்கான அடிப்படையை நிச்சயம் ஏற்படுத்திக் கொடுக்கும். ஆனால், நிஜம் வேறு மாதிரியாக இருக்கக் காண்கின்றோம்.

பல்வேறு காரணங்களின் அடிப்படையில் முஸ்லிம் நாடுகளிடையேயான உறவு பலமற்றதாக இருக்கின்றது. அமெரிக்கா, இஸ்ரேல் உள்ளிட்ட நாடுகளின் நிகழ்ச்சி நிரல்களும் அதற்குத் துணைபோகின்ற அரபுலகின் ஆட்சியாளர்களும் இதற்கு முதற்காரணம். இதனால் உலக முஸ்லிம்கள் நிறையவற்றை இழந்திருக்கின்றார்கள்.

இலங்கை அரசாங்கம், எரிபொருள் கேட்டு கட்டாருக்குச் சென்ற போது, அந்த நாட்டின் ஆட்சியாளர்கள் இலங்கையில் முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் எரிக்கப்பட்டதை சுட்டிக்காட்டி, இந்த அரசாங்கம் பதவி விலகினாலேயே அதனை வழங்க முடியும் என்ற தொனியில் குறிப்புணர்த்தி உள்ளதாக இப்போது தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆயினும், இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிராக இனவாதம் கட்டவிழ்த்து விடப்பட்ட போது, இஸ்லாமிய மதமும் பள்ளிவாசல்களும் கேலிக்கு உள்ளாக்கப்பட்ட போது, அரசாங்கமே நெருக்குவாரப்படுத்திய போது முஸ்லிம் நாடுகள் ஒருவித மெத்தனப் போக்கையே கடைப்பிடித்தன.

இலங்கையில் மட்டுமன்றி, இன்னபிற நாடுகளிலும் முஸ்லிம்கள் இலக்குவைத்து தாக்கப்பட்ட வேளையிலும், ஒடுக்கப்பட்ட சந்தர்ப்பங்களிலும் பெரும்பாலும் அரபுலகம் இவ்வாறுதான் நடந்து கொண்டது. அதாவது, முஸ்லிம் நாடுகளிடையேயான ஒத்துழைப்பும், உலகின் எந்த மூலையிலாவது முஸ்லிம்களுக்கு அநியாயம் நடந்தால் அதற்கு எதிராக போராடுகின்ற உணர்வும் முஸ்லிம் நாடுகளிடம் இல்லை.

இதுதான் இலங்கை முஸ்லிம்களின் இன்றைய நிலையும் ஆகும். அரசியல், மதக் கோட்பாடு, பிராந்திய வாதம், சுய இலாபங்கள் என பல்வேறு காரணங்களின் அடிப்படையில் முஸ்லிம்கள் பிளவுபடுத்தப்பட்டு, துண்டங்களாக்கப்பட்டுள்ளனர்.

முஸ்லிம்களை சரியாக கட்டமைக்கவோ அரசியல்மயப்படுத்தவோ மத, சமூகத் தலைவர்களும் அரசியல் தலைவர்களும் தவறிவிட்டார்கள். இதனால் தொடர்ந்து பலவற்றை முஸ்லிம் சமூகம் இழந்து கொண்டே இருக்கின்றது.

முஸ்லிம்களிடையே காணப்படுகின்ற அரசியல் ரீதியான பிளவு முக்கியமானது. முஸ்லிம் தனித்துவ அடையாள அரசியலை முன்னிறுத்த வேண்டிய ஒரு தேவை உணரப்பட்ட காலத்திலேயே, தனியான முஸ்லிம் கட்சி ஆரம்பிக்கப்பட்டது. 90களின் இறுதிப் பகுதிவரை அது வெற்றிகரமான முன்னெடுப்பாகவும் அமைந்தது. ஆனால், அதன் பின்னர் பல முஸ்லிம் கட்சிகள், அரசியல் அணிகள் தோற்றம் பெற்றாலும், முஸ்லிம் சமூகத்தின் எந்தவோர் உரிமையையும் இவர்கள் பெற்றுக் கொடுக்கவில்லை.

தமக்கு வாக்குச் சேகரிப்பதற்காக இவர்கள் செய்யும் அற்பத்தனமான அரசியலால், முஸ்லிம்கள் ஒவ்வோர் ஊரிலும், ஏன் சில குடும்பங்களில் கூட தனித்தனி குழுக்களாக பிரிக்கப்பட்டுள்ளனர்.

தமது மக்கள் பிரதிநிதி அதிபுத்திசாலி என்றும், சமூக அக்கறையுள்ளவர் என்றும் முட்டாள்தனமாக நம்பி, மக்கள் பிரிந்து பிரிந்து அவர்களுக்குப் பின்னால் செல்வதால் சமூகம் பிளவுபட்டுள்ளது. இதன் தாக்கம் பொது வாழ்விலும் வெளிப்படுகின்றது.

ஆயினும், முஸ்லிம் கட்சிகளும் சரி பெரும்பான்மை கட்சிகளில் உள்ள முஸ்லிம் எம்.பிக்களும் சரி நேரடியாகவும் மறைமுகமாகவும் பெரும்பான்மைக் கட்சிகளுக்கு வாக்குச் சேகரிக்கின்ற முகவர்களாகவே தொழிற்படுவதால், சமூகம் அடைந்து கொண்ட பலன் என்று எதுவும் இல்லை.

அடுத்ததாக, முஸ்லிம்களிடையே 90களின் பிறகு ஏற்பட்டிருக்கின்ற சமயக் கோட்பாடு, கொள்கை ரீதியான பிளவுகளைக் குறிப்பிட்டாக வேண்டும்.

இலங்கையைப் பொறுத்தமட்டில் முஸ்லிம்கள் பெரும்பாலும் மத உணர்வு சார்ந்தவர்களாகவும், மத அடையாளத்துக்கு முன்னுரிமை கொடுப்பவர்களாகவும் இருப்பதால், சமய கோட்பாட்டு மைய பிளவுகள் குறிப்பிடத்தக்க செல்வாக்கைச் செலுத்துகின்றன.

முஸ்லிம்களிடையே ஒரு கடமையை எவ்வாறு செய்வது என்பதில் கருத்து வேற்றுமைகள் உள்ளன. இது ஒரு கட்டத்தில் சமூகத்துக்குள் பெரும் குழப்பத்துக்குக் காரணமாகின. நீதிமன்றங்களை நாடும் நிலையும் ஏற்பட்டது. உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னர் நிலைமைகள் மாற்றமடைந்தாலும், சமூகத்திடையே பிளவுகளுக்கு இதுவும் ஒரு காரணமாகியது.

முஸ்லிம் கட்சிகள் உருவாகி, சுயநலமிகளான பேர்வழிகள் அரசியலுக்கு வந்த பிறகு, அண்மைக்காலத்தில் முஸ்லிம் ஊர்களிடையே ஒற்றுமை சீர்குலைந்துள்ளது. ஊருக்கு எம். பி வேண்டும் அல்லது உள்ளூராட்சி சபை வேண்டும் என்ற கோசமானது அயற்பிரதேசங்களை இரு துருவங்களாக்கி விடுவதை காணலாம்.

இவ்வாறு, எந்தவொரு முறையான கட்டமைப்புக்குள்ளும் ஒழுங்குபடுத்தப்படாத சமூகமாக உள்ள இலங்கை முஸ்லிம்கள், தற்காலத்தில் கட்டுக்கோப்பு இல்லாத இனக் குழுமமாகவும் மாறியிருக்கின்றனர்.

மத ரீதியாகவோ, அரசியல் ரீதியாகவோ, இன அடிப்படையிலோ கட்டுக்கோப்பு என்று எதுவும் இல்லை. முஸ்லிம் சமூகத்தை சரியாக வழிநடத்தக் கூடிய, முஸ்லிம்களால் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட தலைமைகள் யாரும் உருவாகவில்லை.

உள்நாட்டைப் போலவே, புலம்பெயர்ந்து வாழும் இலங்கை முஸ்லிம்களிடையேயும் ஓர் ஒருங்கிணைந்த செயற்பாட்டை அவதானிக்க முடியவில்லை.

ஒரு குடையின் கீழ் கட்டமைக்கப்படாத, பிளவுபட்ட சமூகமாக இலங்கை முஸ்லிம்கள் இருப்பதானது, தமது அபிலாஷைகளை அடைந்து கொள்வதில் எதிர்மறை தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அதன் விளைவுகளைத்தான் நாம் தொடராக அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம்.

# மைனாவின் தேடல்



தமிழ் சினிமாவில் மைனா படம் மூலம் பிரபலமானவர் அமலாபால். அதன் பிறகு விஜய், விக்ரம், தனுஷ் என பல முன்னணி ஹீரோக்களுக்கு ஜோடியாக நடித்தார்.

விஜய் நடிப்பில் ஏ.எல்.விஜய் இயக்கிய தலைவா திரைப்படத்தில் அமலாபால் நாடியகியாக நடித்தார். அப்போது, ஏ.எல். விஜய்யும் -அமலா பாலும் காதலிக்கத் தொடங்கி, 2014ம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார்கள்.


ஆனால் 2017ஆம் ஆண்டு கருத்து வேறுபாடு காரணமாக அவர்கள் விவாகரத்து பெற்றார்கள். அதையடுத்து இயக்குனர் ஏ.எல். விஜய், ஐஸ்வர்யா என்ற வைத்தியரை இரண்டாவது திருமணம் செய்து கொண்டார். அவர்களுக்கு ஒரு குழந்தையும் உள்ளது.

ஆனால் அமலா பால் இப்போது வரை இரண்டாவது திருமணம் செய்து கொள்ளாமல் வாழ்ந்து வருகிறார். இதன் காரணமாகவே அவ்வப்போது திருமண வதந்திகளிலும் அவர் சிக்கிக் கொள்கிறார்.

அண்மையில் சமூக ஊடகத்தில் ரசிகர்களுடன் அமலாபால் உரையாடிய போது ஒரு ரசிகர், உங்களை திருமணம் செய்து கொள்ள என்னென்ன தகுதிகளை எதிர்பார்க்கிறீர்கள்? என்று ஒரு கேள்வி கேட்டார்.

அதற்கு அமலாபால், அந்த தகுதி என்னவென்று இன்னும் எனக்கு தெரியவில்லை. அதோடு என்னை நானே புரிந்து கொள்ளும் பயணத்தில்தான் இப்போது இருந்து கொண்டிருக்கிறேன். அதனால் என்னை திருமணம் செய்து கொள்ள என்னென்ன தகுதி வேண்டும் என்பதை கண்டுபிடித்தவுடன் கண்டிப்பாக உங்களுக்கு சொல்கிறேன் என்று கூறியுள்ளார்.

## அஞ்சலியின் ஆட்டம்



தெலுங்கில் அல்லு அர்ஜூன் நடிப்பில் வெளியான புஷ்பா திரைப்படத்தின் முதல் பாகத்தில் ஒரு பாடலுக்கு கவர்ச்சி நடனம் ஆடி இருந்தார் சமந்தா. அந்த பாடல் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு பெற்றது.

இந்த நிலையில் தற்போது நடிகை அஞ்சலியும் தெலுங்கில் நிதின் நாயகனாக நடித்து வரும் 'மச்சேர்லா நியோஜெகவர்கம்' என்றத் திரைப்படத்தில் ஒரு பாடலுக்கு கவர்ச்சி நடனம் ஆடி இருக்கிறார்.

அந்த பாடலில் புஷ்பா திரைப்படத்தில் சமந்தா நடனமாடியது போன்ற ஆடையில் தோன்றுகிறார் அஞ்சலி. அதுகுறித்த போஸ்டர் ஒன்று தற்போது வெளியாகியுள்ளது.

மேலும் நிசப்தம் திரைப்படத்துக்கு பிறகு தற்போது தெலுங்கில் ஷங்கர் இயக்கி வரும் ராம்சரணின் 15ஆவது திரைப்படத்தில் ஒரு முக்கிய வேடத்தில் நடித்து வரும் அஞ்சலி, ஜான்சி என்ற வெப் தொடரிலும் நடித்து வருகிறார்.

இதையடுத்து தொடர்ந்து பாடல்களுக்கு நடனமாட தான் தயாராக இருப்பதாகவும் தகவல் வெளியிட்டு இருக்கிறார் அஞ்சலி.

## மீண்டும் 'லவ்டுடே'




ஜிவி பிரகாஷ் நடித்த 'பேச்சிலர்' திரைப்படத்தில் நாயகியாக நடித்த நடிகை திவ்யபாரதியின் அடுத்த திரைப்பட தலைப்பாக விஜய்யின் சூப்பர்ஹிட் படத்தின் தலைப்பு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கதிர் ஹீரோவாகவும், திவ்யபாரதி ஹீரோயினாகவும் நடித்து இருக்கும் திரைப்படத்தை ஷிவ் மோகா என்பவர் இயக்கி வந்தார். இவர் ஏற்கெனவே ஜீரோ என்ற திரைப்படத்தை இயக்கியவர்.

இந்தத் திரைப்படத்தின் படப்பிடிப்பு அண்மையில் முடிவடைந்தது. இந்த நிலையில் எக்ஷன் மற்றும் ரொமான்ஸ் கலந்த இந்தத் திரைப்படத்துக்கு 'லவ்டுடே' என்று தலைப்புவைக்கப்பட்டுள்ளது.

இதே தலைப்பில் கடந்த 1997ஆம் ஆண்டு விஜய், சுவலட்சுமி நடிப்பில் உருவான சூப்பர்ஹிட் திரைப்படம் வெளியானது என்பது குறிப்பிடத்தக்கது.

## ரம்பா ரசித்த யானை



தமிழ் சினிமாவில் பிரபல கதாநாயகியாக வலம் வந்தவர் ரம்பா. இவர் 2010ல் கனடாவைச் சேர்ந்த தொழிலதிபர் இந்திரகுமார் என்பவரை திருமணம் செய்து கொண்டார். அவர்களுக்கு இரண்டு மகள்களும் ஒரு மகனும் உள்ளனர்.

சினிமாவில் நடிக்க வந்த காலத்தில் சென்னையில் குடி இருந்த ரம்பா, திருமணத்துக்கு பிறகு கனடா நாட்டில் செட்டில் ஆகிவிட்டார். 5 ஆண்டுகளுக்கு பிறகு தற்போது சென்னை வந்திருக்கிறார் ரம்பா.

அப்படி வந்தவர், நடிகர் அருண் விஜய்யின் தங்கையான நடிகை ஸ்ரீ தேவியுடன் இணைந்து யானை திரைப்படத்தை சென்னையில் உள்ள திரையரங்கில் பார்த்து ரசித்துள்ளார்.

மேலும், தியேட்டரை விட்டு வெளியே வந்த நடிகை ரம்பா ஊடகங்களிடம், ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு குழந்தைகளுடன் இந்தியாவுக்கு சுற்றுலா வந்ததாக தெரிவித்தார்.

மேலும், யானை திரைப்படத்தில் இடம்பெற்றுள்ள எக்ஷன் மற்றும் நகைச்சுவை காட்சிகளை குழந்தைகள் ரசித்து பார்க்கிறார்கள். ஹரி சிறப்பாக இயக்கி உள்ள இந்தத் திரைப்படத்தில் அருண் விஜய் சூப்பராக நடித்துள்ளார் என்றும் தெரிவித்தார் ரம்பா.




## பாடும் 'வாரிசு'

நடிகர் விஜய் தான் நடித்து வரும் பெரும்பாலான திரைப்படங்களில் ஒரு பாடலை பாடும் வழக்கத்தை கொண்டுள்ளார். 'ரசிகன்' என்றத் திரைப்படத்தில் முதன்முதலாக பாடத் தொடங்கிய விஜய் அதன் பின் தொடர்ச்சியாக பலத் திரைப்படங்களில் ஒரு பாடலை பாடி வருகிறார்.

அண்மையில் வெளியான 'மாஸ்டர்', 'பீஸ்ட்' திரைப்படங்களிலும் ஒரு பாடலை விஜய் பாடியுள்ளார். இந்த நிலையில் தற்போது விஜய் நடித்து வரும் 'வாரிசு' திரைப்படத்திலும் அவர் தமன் இசையில் விவேக்கின் பாடல் வரிகளில் உருவான ஒரு பாடலை பாட இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த தகவல் விஜய் ரசிகர்களுக்கு கூடுதல் உற்சாகத்தை அளித்துள்ளது. இந்த நிலையில் 'வாரிசு' திரைப்படத்தின் அடுத்த கட்ட படப்பிடிப்பு ஆந்திராவில் தொடங்கியுள்ளதாகவும் இந்த படப்பிடிப்பில் விஜய் விரைவில் கலந்து கொள்வார் என்றும் கூறப்படுகிறது.

தமிழகம்

அ.தி.மு.க பொதுக்குழு கூட்டத்தை

# நிகழ்நிலையில் நடத்த திட்டமாம்

ஒற்றை தலைமை என்ற இலக்கை நோக்கி அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் (அ.தி.மு.க) பயணிக்க தொடங்கியுள்ளது. கடந்த ஜூன் 23 ஆம் திகதி நடைபெற்ற அ.தி.மு.க பொதுக்குழு, செயற்குழு கூட்டத்தில் ஒற்றை தலைமை தொடர்பாக எவ்வித முடிவும் எடுக்கப்படவில்லை.

எனினும், எடப்பாடி பழனிசாமிதான் கட்சியின் பொதுச்செயலாளர் என அறுதியிட்டு காட்டியுள்ளது.

இந்நிலையில், பொதுக்குழு ஜூலை 11ஆம் திகதி நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. அனைத்து பொதுக்குழு உறுப்பினர்களுக்கும் அழைப்பிதழ் சென்று சேர்ந்துள்ளது. சென்னை, வானகரத்தில் உள்ள ஸ்ரீவாரு மண்டபத்தில் பொதுக்குழுவை நடத்த ஏற்பாடுகள் தயாராகி வருகின்றன.

இந்நிலையில் தமிழகத்தில் கடந்த சில நாள்களாக கொரோனா தொற்று அதிகரித்து வருகிறது. குறிப்பாக சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் ஆகிய 4 மாவட்டங்களில் கொரோனா பாதிப்பு அதிகமாக பதிவாகி வருகிறது. கொரோனா தொற்று நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் நிகழ்நிலை மூலமும் பொதுக்குழுவை நடத்த மாற்று திட்டத்தையும் தலைமைக் கழக நிர்வாகிகள் மேற்கொண்டுள்ளனர்.



இது தொடர்பாக பொதுக்குழு உறுப்பினர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் நேரடியாக நடத்தவே திட்டமிட்டுள்ள நிலையில், கொரோனாவை காரணம் காட்டி அரசு அனுமதி வழங்காதபட்சத்தில் இந்த மாற்று திட்டத்தை பயன்படுத்தவும் தலைமை கழக நிர்வாகிகள் முடிவெடுத்துள்ளனர். தமிழகத்தில் தினசரி கொரோனா தொற்று 2,500ஐ கடந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஹைதராபாத்

அனைத்து மாநிலங்களிலும்

## பா.ஜ.கவின் சகாப்தமாகும்



தமிழ்நாடு உள்ளிட்ட அனைத்து மாநிலங்களிலும் பாரதிய ஜனதா கட்சி (பா.ஜ.க) விரைவில் ஆட்சி அமைக்குமென மத்திய அமைச்சர் அமித் ஷா உறுதியுடன் தெரிவித்துள்ளார்.

தெலங்கானா மாநிலம் ஹைதராபாத்தில் பாரதிய ஜனதா கட்சியின் இரு தேசிய செயற்குழு கூட்டம் நேற்று முன்தினம் (03) ஆரம்பமானது. இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக பிரதமர் நரேந்திர மோடி, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, பா.ஜ.க தேசிய தலைவர் ஜே.பி.நட்டா, உத்திர பிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் ஆகியோர் உள்ளிட்ட அக்கட்சியின் பல்வேறு முக்கிய பிரமுகர்கள் ஹைதராபாத் வந்துள்ளனர்.

மகாராஷ்டிரா

## தமிழ் பாட புத்தகத்தில் புதுக்கோட்டை மாணவி



புதுக்கோட்டை, திருவள்ளுவர் நகரைச் சேர்ந்தவர் கே.ஜெயலட்சுமி. இவர் கல்லூரியில் பி.ஏ வரலாறு படித்து வருகிறார்.

இவர், ராணியார் அரசு மகளிர் பள்ளியில் பிளஸ் 1 படித்தபோது, அமெரிக்க நிறுவனம் நடத்திய போட்டியில் வெற்றி பெற்று நாசாவை பார்வையிட தேர்வு செய்யப்பட்டார்.

ஆனால், அதற்கான பயணச் செலவை மாணவியே ஏற்க வேண்டுமென அந்நிறுவனம் அறிவித்திருந்தது. இதுகுறித்து தகவல் வெளியானதைத் தொடர்ந்து முழு தொகையையும் 'கிராமாலயா' என்ற நிறுவனம் வழங்கியது. அப்போது, தேவையான தொகை கிடைத்துவிட்டது என்று தொண்டு நிறுவனத்தினரிடம் கூறிய மாணவியிடம், வேறு ஏதாவது உதவி தேவையெனில் கேளுங்கள் என்றதும், "ஊர் மக்கள் கழிப்பறை இல்லாமல் அவதிப்பட்டு வருவதால், கழிப்பறை கட்டிக் கொடுங்கள்" என்று கேட்டுள்ளார். இதை ஏற்ற அந்த நிறுவனம், 126 வீடுகளுக்கு கழிப்பறையை கட்டிக் கொடுத்தது.

ஜெயலட்சுமியின் இத்தகைய செயல்பாடுகள், மகாராஷ்டிராவில் உள்ள 7ஆம் வகுப்பு தமிழ் பாடப்புத்தகத்தில் 'கனவு மெய்ப்படும்' எனும்தலைப்பில் ஒரு பாடம் இடம்பெற்றுள்ளது.

சென்னை

## முகக்கவசம் கட்டாயமானது



சென்னையில் பொது இடங்களில் மக்கள் முகக்கவசம் அணிவது கட்டாயம் எனவும் சென்னையில் கொரோனாவில் இருந்து பாதுகாத்துக்கொள்ள முகக்கவசம் கட்டாயம் அணிய வேண்டுமென சென்னை பெருநகர மாநாகராட்சி அறிவித்துள்ளது.

வணிக நிறுவனங்கள் ஒரே நேரத்தில் மக்கள் அதிகம் கூடுவதை தவிர்க்க வேண்டுமெனவும் வணிக வளாகங்கள், திரையரங்குகள், துணிக்கடைகளில் ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் கட்டாயம் முகக்கவசம் அணிய வேண்டும் எனவும் கொரோனா வழிகாட்டு நெறிமுறைகளை வணிக நிறுவனங்கள் கட்டாயம் பின்பற்ற வேண்டுமெனவும் சென்னை மாநாகராட்சி அறிவுறுத்தியுள்ளது.

கொரோனா பரவல் அதிகரித்து வருவதால் மாநகராட்சி இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

கர்நாடகம்

## மாணவிகளுக்கும் தாயாருக்கும் ஆசிரியர் பாலியல் தொல்லை

கர்நாடகா மாநிலத்தின் ராய்ச்சூர் மாவட்டத்தில் அரசு பாடசாலையொன்றின் ஆசிரியர், மாணவிகள் மற்றும் அவரது தாயாருக்கு பாலியல் தொல்லை கொடுத்த சம்பவம் அரங்கேறியுள்ளது.

அந்தப் பாடசாலையின் ஆசிரியர், மாணவிகளுக்கு தொடர் பாலியல் தொல்லை கொடுத்துவந்துள்ளார். இவர் மீது மேலோட்டமான முறைப்பாடுகள் வந்து கொண்டிருந்தன. எனினும், மாணவி ஒருவரின் தாயாருக்கே பாலியல் தொல்லை கொடுத்துள்ளார்.

அந்த மாணவிக்கு பிரத்தியேக வகுப்புகள், அரசு உதவிகள் உள்ளிட்டவற்றை செய்து தருவதாகக் கூறி, அவரின் தாயரை வற்புறுத்தி பாலியல் உறவில் ஈடுபட்டுள்ளார். அத்துடன் அதை வீடியோ எடுத்து மிரட்டல் விடுத்துள்ளார்.

தனக்கு ஒத்துழைக்காவிட்டால் வீடியோவை சமூக வலைத்தளத்தில் வெளியிட்டு விடுவேன் என மிரட்டியும் உள்ளார். ஒரு கட்டத்தில் அந்தப் பெண் அவரின் பேச்சை கேட்காததால் அதை சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார். இதைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட பெண், பொலிஸ் நிலையத்தில் ஆசிரியர் மீது முறைப்பாடு அளித்துள்ளார்.

அதுதொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கையில் அவ்வாசிரியர் பல்வேறு மாணவிகளிடம் இது போன்ற பாலியல் அத்துமீறிலில் ஈடுபட்டமை தெரியவந்துள்ளது.

ஆசிரியரை கல்வித்துறை பணியிடை நீக்கம் செய்துள்ளது. மேலும், தலைமறைவாகியுள்ள ஆசிரியரை தேடும் பணியில் பொலிஸார் ஈடுபட்டுவருகின்றனர்.

சென்னை

## விஜயகாந்த் உடல்நிலை பலவீனமானது உண்மை

### பிரேமலதா விஜயகாந்த்



தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் (தே.மு.தி.க) தலைவர் விஜயகாந்த், கடந்த சில ஆண்டுகளாக உடல்நலம் பாதிக்கப்பட்டதால், பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்காமல் இருந்துவருகிறார்.

இந்நிலையில், சமீபத்தில் விஜயகநாந்தின் கால் விரல்கள் மருத்துவர்களின் ஆலோசனைப்படி அகற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

மேலும் விஜயகாந்த் உடல்நிலை குறித்து பரவும் பொய்யான வதந்திகளை கழக நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் யாரும் நம்ப வேண்டாம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனிடையே, குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிடும் பா.ஜ.க வேட்பாளர் திரவுபதி முர்மு, நுங்கம்பாக்கத்தில் உள்ள ஒட்டலில் தே.மு.தி.க பொருளாளர் விஜயகாந்த் பிரேமலதா உள்ளிட்டோரைச் சந்தித்தார்.

ஈராக்

# ஈராக்கை பந்தாடும் மணற்புயல்



ஈராக்கில் கடந்த 5 மாதங்களுக்கு மேலாக மணற்புயல் வீசி வருகின்றது. இதன் காரணமாக 5,000 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் சுவாசக் கோளாறு, சருமப் பிரச்சினைகளுக்கு ஆளாகியுள்ளனர் என அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.


அதேசமயம் கடுமையாக மணற்புயல் காரணமாக, வீதிப் போக்குவரத்திற்கு பெரிதும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஈராக்கின் தலை நகர் பாக்தாத்தில் வீசிவரும் மணற்புயல் காரணமாக, விமான சேவைகளும் இரத்து செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியா



## பாலாலும் தேனாலும் மகனை நீராட்டும் தாய்



பிரித்தானியாவைச் சேர்ந்த தாய் ஒருவர், தனது மகனுக்காக இலட்சக்கணக்கில் செலவு செய்துவருகிறார்.

பிரித்தானியாவின் தெற்கு யார்க்ஷயரில் உள்ள ஷெஃபீல்டு பகுதியைச் சேர்ந்தவர் கேசி அக்ரம்.

32 வயதான கேசிக்கு, ஜரீம் என்ற 1 வயதான மகன் உள்ளான். நடுத்தர குடும்பத்தை சேர்ந்த கேசி, தனது மகனுக்கு இலட்சக்கணக்கில் செலவுசெய்து வருகிறார்.

குறிப்பாக, வாரத்திற்கு இரண்டு முறை ஜரீமை நீராட்ட பாலையும் தேனையும் பயன்படுத்தி வருகின்றார். அத்துடன் ஜரீமிக்கு, மசாஜ் செய்வதற்காக விலையுயர்ந்த எண்ணெய்களை உபயோகிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அதுமட்டுமில்லாமல் தங்கத்தினால் செய்யப்பட்ட குழந்தைகளுக்காக சூப்பும் இறப்பர் கருவியையும் பயன் படுத்தி வருகின்றார்.

இது குறித்து கேசி கருத்துத் தெரிவிக்கையில் "எனது மகனுக்கு நான் பயன்படுத்தும் ஒவ்வொரு பொருளும் மிகவும் தரமானதாக இருக்கவேண்டும் என விரும்புகிறேன். எனது மகனுக்காக நான் எவ்வளவு கஷ்டப்படவும் தயாராக இருக்கிறேன். அவனுக்கு வாங்க வேண்டிய பொருட்களுக்கான பணம் என்னிடம் இல்லை என்றால், அவனுடைய தந்தையிடம் தொலைபேசி மூலம் தெரிவிப்பேன்.

அவர் உடனடியாக பணம் வழங்கி விடுவார். எனது மகன் விருப்பப்படும் அனைத்தும் அவனுக்கு கிடைக்க வேண்டும். அதுவே எனது வாழ்க்கையின் முக்கிய கடமையாக கருதுகிறேன்" என்கிறார். மொடலாகவும், நடிகையாகவும் இருந்த கேசி தற்போது தனது பணிகளில் இருந்து விலகி முழுவதுமாக ஜரீனைக் கவனித்து வருகின்றார் எனக் கூறப்படுகின்றது.

மேலும் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் கடைகளில் தனக்கு உடைகள் வாங்கிக்கொள்ளும் கேசி, ஜரீனுக்கு 50 யூரோ மதிப்பில் ஒரு டி-ஷர்ட்டை வாங்குவதாகவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரித்தானியா

## திடீரென வைரலாகும் டயானாவின் ஓவியம்



மறைந்த பிரித்தானிய இளவரசி டயானாவின் அரிய ஓவியம், லண்டனில் முதல்முறையாக பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

குறித்த ஓவியத்தை பிரபல அமெரிக்க ஓவியக்கலைஞரான நெல்சன் ஷாங்க்ஸ் என்பவர் வரைந்துள்ளார். அண்மையில் இந்த ஓவியம் 2 இலட்சத்து 1,600 டொலருக்கு ஏலம் விடப்பட்டுள்ளதோடு தற்போது அந்த ஓவியம் லண்டன் ஓவியக்கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ளது.

இத்தாலி



## பனிமலை சரிந்து விபத்து; 6 பேர் உயிரிழப்பு

இத்தாலியில் புன்டா ரோக்கா என்ற பகுதியில் சுமார் 3,300 மீற்றர் உயரம் கொண்ட 'மர்மலாடா' என்ற சிகரம் உள்ளது. இங்கு வருகை வரும் சுற்றுலாப் பயணிகள் மலையேறுதல், பனிச்சறுக்கு உள்ளிட்ட சாகசங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் (03) புன்டா ரோக்கப் பகுதிக்கு அருகில் எதிர்பாராத விதமாக பனிப்பாறையொன்று சரிந்து விழுந்துள்ளது.

இதன் போது மலையேற்றதில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது குறித்த பனிப்பாறை விழுந்ததில் 6 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், 8 பேர் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான்

### மலையில் இருந்து பஸ் விழுந்து விபத்து:

## 20 பேர் உயிரிழப்பு

வேகக் கட்டுப்பாடை இழந்த பஸ்ஸொன்று மலையில் இருந்து விழுந்து விபத்துக்குள்ளானதில் 20 பேர் உயிரிழந்த சம்பவம் பாகிஸ்தானில் இடம்பெற்றுள்ளது.

பாகிஸ்தானின் ராவல்பிண்டி நகரில் இருந்து குவெட்டா நகரை நோக்கி நேற்று முன்தினம் (03) சுமார் 33 பயணிகளுடன் பயணித்த பஸ்ஸொன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்விபத்தில் 20 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் பலர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மெக்சிகோ

## முதலைக்கு முத்தம் கொடுத்து திருமணம் செய்த மேயர்



மெக்சிகோ நாட்டின் தென் மேற்கு பகுதியில் அமைந்துள்ள சான் பெட்ரோ ஹவுமெலுவா எனும் நகரத்தின் மேயராக இருந்து வருபவர் விக்டர் ஹ்யூகோ சோசா.

அந்த நகரம் மற்றும் அப்பகுதி மக்கள் அனைவரும் செழிப்பாக இருக்க வேண்டும் என்பதற்காக, பழங்கால சடங்கின் படி, ஒரு வினோதமான சடங்கினை அங்குள்ள மக்கள் கடைபிடித்து வருகின்றனர்.

அதன்படி, அப்பகுதி மேயரான விக்டர், பெண் முதலை ஒன்றை திருமணம் செய்து கொண்டார். அங்குள்ள ஊர் மக்கள் அனைவரும் திரளாக, இந்தத் திருமண நிகழ்வில் கலந்து கொண்டனர். அதே போல, இசை முழங்க, வண்ணமயமாக, வெகு விமரிசையாக இந்தத் திருமண விழாவும் நடைபெற்றது.

மேலும், இந்தத் திருமணத்தில் பெண் முதலைக்கு திருமண உடையான வெள்ளை நிற ஆடை அணிவிக்கப்பட்டிருந்ததோடு, பாதுகாப்பு காரணங்களுக்காக முதலையின் வாய் பகுதி கட்டப்பட்டிருந்தது.

இந்நிலையில் திருமணம் முடிந்ததை குறிக்கும் விதமாக, முதலைக்கு முத்தம் ஒன்றையும் மேயர் விக்டர் கொடுத்தார்.

இந்நிலையில் இத்திருமணம் குறித்து விக்டர் கூறும் போது, "இயற்கையிடம் மழை, உணவு, மீன் என அனைத்தும் வேண்டி, நாங்கள் இந்தப் பிரார்த்தனையை செய்கிறோம். இது எங்களின் நம்பிக்கை" என தெரிவித்துள்ளார்.

இந்தச் சடங்கினை அப்பகுதியின் பழங்குடி மக்கள், 200 ஆண்டுகளுக்கும் மேலாக கடைபிடித்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.



### இந்தியாவுக்கெதிரான ஐந்தாவது டெஸ்டில்

# பின்தங்கியுள்ள இங்கிலாந்து

இந்தியாவுக்கு எதிரான ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், பேர்மிங்ஹாமில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமான ஐந்தாவது டெஸ்டின் நேற்று முன்தின மூன்றாம் நாள் முடிவில் இங்கிலாந்து பின்தங்கியுள்ளது.

மூன்றாம் நாளை தமது முதலாவது இனிங்ஸில் 5 விக்கெட்டுகளை இழந்து 84 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த இங்கிலாந்து, அணித்தலைவர் பென் ஸ்டோக்ஸின் 25, சாம் பில்லிங்ஸின் 36 ஓட்டங்களோடு ஜொனி பெயார்ஸ்டோ அதிரடியாகப் பெற்ற 106 ஓட்டங்களால் சகல விக்கெட்டுகளையும் இழந்து 284 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், மொஹமட் சிராஜ் 4, அணித்தலைவர் ஜஸ்பிரிட் பும்ரா 3, மொஅஹம்ட் ஷமி 2, ஷர்துல் தாக்கூர் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு, தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் இந்தியா ஆரம்பத்திலேயே ஷுப்மன் கில்லை ஜேம்ஸ் அன்டர்ஸனிடம் இழந்ததோடு, அடுத்து குறிப்பிட்ட இடைவெளிகளில் ஹனும விஹாரி, விராட் கோலியையும் ஸ்டூவர்ட் ப்ரோட், ஸ்டோக்ஸிடம் இழந்தது.

எனினும், செட்டேஸ்வர் புஜாராவின் ஆட்டமிழக்காத 50, றிஷப் பண்டின் ஆட்டமிழக்காத 30 ஓட்டங்களோடு மூன்றாம் நாள் முடிவில் 3 விக்கெட்டுகளை இழந்து 125 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

**ஸ்கோர் விவரம்:**

நாணயச் சுழற்சி: இங்கிலாந்து


இந்தியா: 416/10 (துடுப்பாட்டம்: றிஷப் பண்ட் 146, இரவீந்திர ஜடேஜா 104, ஜஸ்பிரிட் பும்ரா ஆ.இ 31 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜேம்ஸ் அன்டர்சன் 5/60, மத்தியூ பொட்ஸ் 2/105, ஜோ றூட் 1/23, ஸ்டூவர்ட் ப்ரோட் 1/89, பென் ஸ்டோக்ஸ் 1/47)

இங்கிலாந்து: 284/10 (துடுப்பாட்டம்: ஜொனி பெயார்ஸ்டோ 106, சாம் பில்லிங்ஸ் 36, ஜோ றூட் 31, பென் ஸ்டோக்ஸ் 25, மத்தியூ பொட்ஸ் 19 ஓட்டங்கள். பந்துவீச்சு: மொஹமட் சிராஜ் 4/66, ஜஸ்பிரிட் பும்ரா 3/68, மொஹமட் ஷமி 2/78, ஷர்துல் தாக்கூர் 1/48)

இந்தியா: 125/3 (துடுப்பாட்டம்: செட்டேஸ்வர் புஜாரா ஆ.இ 50, றிஷப் பண்ட் ஆ.இ 30, விராட் கோலி 20 ஓட்டங்கள். பந்துவீச்சு: பென் ஸ்டோக்ஸ் 1/22, ஜேம்ஸ் அன்டர்சன் 1/26, ஸ்டூவர்ட் ப்ரோட் 1/38)

### 10 செக்கன்களுக்குள் 100 மீற்றரைக் கடந்த

## முதலாவது தெற்காசியராக யுபுன் அபேயக்கோன்



சுவிற்ஸர்லாந்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற Resisprint International 2022 போட்டியில் ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியை 9.96 செக்கன்களில் கடந்து இலங்கையின் யுபுன் அபயக்கோன் தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார்.

அந்தவகையில், 100 மீற்றரை 10 செக்கன்களுக்குள் கடந்த முதலாவது தெற்காசியராக தனது பெயரை யுபுன் அபயக்கோன் பதிவு செய்துள்ளார்.

## மாகாண மட்டத்திலான போட்டிகளுக்குத் தெரிவு

நுவரெலியா கல்வி வலயத்துக்கு உட்ட பாடசாலைகளுக்கிடையில் இடம்பெற்ற வலய மட்ட கரப்பாந்தாட்ட போட்டிகளில் 16,18 மற்றும் 20 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கிடையில் இடம்பெற்ற கரப்பந்தாட்ட போட்டிகளில் தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலய அணிகள் முதலாம் இடங்களை பெற்று மத்திய மாகாணத்தில் இடம்பெறவுள்ள மாகாண மட்ட போட்டிகளுக்கு தெரிவாகியுள்ளன. (பி. கேதீஸ்)





### இரண்டாவது இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டியில்

## பங்களாதேஷை வீழ்த்திய மேற்கிந்தியத் தீவுகள்

பங்களாதேஷுக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டித் தொடரில், டொமினிக்காவில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இரண்டாவது போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: மே. தீவுகள்

மே. தீவுகள்: 193/5 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: றொவ்மன் பவல் ஆ.இ 61 (28), பிரண்டன் கிங்க் 57 (43), நிக்கலஸ் பூரான் 34 (30), கைல் மேயர்ஸ் 17 (09), ஒடியன் ஸ்மித் ஆ.இ 11 (04) ஓட்டங்கள். பந்துவீச்சு: மஹெடி ஹஸன் 1/31 [4], மொஷாடெக் ஹொஸைன் 1/0 [1])

பங்களாதேஷ்: 158/6 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஷகிப் அல் ஹஸன் ஆ.இ 68 (52), அஃபிஃப் ஹொஸைன் 34 (27) ஓட்டங்கள். பந்துவீச்சு: றொமாறியோ ஷெப்பர்ட் 2/28 [4], அகீல் ஹொஸைன் 1/27 [4], ஹெய்டன் வோல்ஷ் ஜூனியர் 0/23 [4])

போட்டியின் நாயகன்: றொவ்மன் பவல்



### நிந்தவூர் பிரதேசத்திலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு

## விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைப்பு

எம்.என்.எம். அப்ராஸ்



நிந்தவூர் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 13 விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு மெக் ஸ்போர்ட்ஸ் பார்க் அரங்கில் அண்மையில் நடைபெற்றது.

நிந்தவூர் பிரதேச சபை உறுப்பினரான எம்.எம். எம். அன்சார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான பைசல் காசிம் பிரதம அதிதியாக கலந்து விளையாட்டு கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கி வைத்தார்.

பிரதேசத்திலுள்ள இளைஞர்களின் விளையாட்டுத்திறனை மேம்படுத்தும் நோக்குடன் பைசல் காசிமின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் இப்பொருட்கள் கொள்வனவு செய்து வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் செவ்வாய்க்கிழமை, 05 ஜூலை 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.